மனமிசைந்து ஏவி
மங்கையர் நாடும் ஒரே
★ புடைவை ஸ்தாபனம் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

பட்டுச் சாறிகள்
பட்டுவேட்டிகள் மற்றும்
சிறுவர்களுக்கும்
பெரியவர்களுக்கும் புதிய
டிசைன் புடைவைகளை
தெரிவு செய்ய
★ இன்றே நாடுங்கள் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 12 வியாழக்கிழமை (26 – 01 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 60

# தமிழ் அகதிகளை நோர்வேயும் திருப்பி அனுப்ப தீவிர ஏற்பாடு

## உடனடியாக 300 பேர் அங்கிருந்து நாடு கடத்தப்படுவர்

கொழும்பு, ஜனவரி 26

நோர்வேயும் அங்குள்ள ஈழத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு முடிவு செய்துள்ளது.

இந்த முடிவின் பிரகாரம் உடனடியாக 300 ஈழத் தமிழர்களை அவர்களது நாட்டுக்குத் திருப்பி அனுப்புவதற்கான தீவிர ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இதுவரை, இந்தியாவைப் பின்பற்றி சுவிட்ஸர்லாந்து, சுவீடன், நெதர்லாந்து ஆகிய நாடுகளே ஈழத்தமிழ் அகதிகளை அனுப்புவதில் தீவிர அக்கறை காட்டி வந்தன.

இப்போது நோர்வேயும், இலங்கையில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட போர் இடைநிறுத்தத்தைக் காரணம் காட்டி ஈழத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப முடிவு செய்துள்ளது.

ஈழத் தமிழ் அகதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த விஸாவை மீளப்பெறவும்—

அவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதில்லை என்றும்— நோர்வே அரசு முடிவு செய்துள்ளதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த நோர்வே அரசின் பிராந்திய அலுவலக அதிகாரிகள் தெரிவித்த சிபார்சின் பிரகாரமே அந்நாட்டு அரசு இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நிலை உருவாகியுள்ளதாகவும்.

அங்கு மனித உரிமை நிலை சீராகியுள்ளதாகவும்— அந்த அதிகாரிகள் சிபார்சு செய்திருந்தனர்.

இந்தியா, சுவீடன், சுவிட்ஸர்லாந்து, ஆகிய இடங்களில் இருந்து பல வருடங்களுக்கு முன்னர் நோர்வே வந்த இலங்கைத் தமிழ்க் குடும்பங்களும் திருப்பி அனுப்பப்பட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆங்கில ஆசிரியர்கள் 750 பேருக்கு நியமனம்

கொழும்பு, ஜன. 26

750 ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருக்கின்றனர்.

சென்ற ஆண்டு நடைபெற்ற ஆங்கில ஆசிரியர் பரீட்சை முடிவுகளுக்கு அமைய இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும்.

55 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்கே நியமனங்கள் வழங்கப்படவிருக்கின்றது.

இதுதவிர மேலதிகமாக 175 பயிற்சி ஆசிரியர்களும் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்றனர்.

இவர்களுக்கான குறைந்த பட்சப் புள்ளி சம்பந்தப்பட்ட மாகாணங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். இது சிங்கள, தமிழ், மலையகத் தமிழ், முஸ்லிம் சமூகம் என்ற அடிப்படையில் வித்தியாசமாக இருக்கும் (ஒ-3)

## பங்கீட்டு அடிப்படையில் இன்று முதல் 5 கிலோ மா

யாழ்ப்பாணம், ஜன. 26

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள மா தட்டுப்பாட்டை அடுத்து ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5 கிலோ மா பங்கீட்டு அடிப்படையில் இன்று முதல் வழங்கப்படவிருக்கிறது.

ப.நோ.கூ.சங்க கிளைகள் ஊடாக ஆயிரம் மெற்றிக் தொன் மா விற்பனை செய்யப்பட இருப்பதாக யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதன் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ-3)

## 3 ஆயிரம் தொன் அரிசி கப்பலில் வந்து சேரும்

யாழ்ப்பாணம், ஜன. 26

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அரிசித்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் கொழும்பில் இருந்து 3 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி கப்பல் மூலம் எடுத்துவர ஏற்பாடாகியுள்ளது.

கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் இது தொடர்பாக நெல் சந்தைப்படுத்தும் சபையுடன் பேச்சு நடத்தி வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இவ்வார இறுதிக்குள் பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கும் 'குமண' கப்பல் பொருள்களை இறக்கிவிட்டு கொழும்பு திரும்பி அரிசியை ஏற்றி வர ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் தெரிய வந்தது. [ஒ-3]

## 4 நாட்களுக்கு மட்டுமே இனிப் படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜன. 26

கிளாலி பூநகரிப் படகுச்சேவை இனி கிழமையில் நான்கு நாட்களே நடைபெறும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

செவ்வாய், புதன், வெள்ளி, சனி ஆகிய நாட்களில் பிற்பகல் 4மணிக்கு படகுச்சேவை நடைபெறும் என்றும் —

காலை நேரங்களில் நடைபெறமாட்டாது என்றும் — விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ-3)

வாகனங்களுக்குரிய

## பற்றறி, உதிரிப்பாகங்கள் எடுத்துவர அனுமதியில்லை

### தாண்டிக்குளம் படையினர் கெடுபிடி

யாழ்ப்பாணம், ஜன. 26

தடை நீக்கப்பட்டதாக கடந்த 21ஆம் திகதி அரசால் அறிவிக்கப்பட்ட ''பற்றறி'' வகைகளை வடக்கே எடுத்து வர தாண்டிக்குளம் படையினர் அனுமதிக்கவில்லை என்று நேற்று யாழ். வந்த பயணிகள் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிள் பற்றறிகளையும், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களையும் எடுத்து வரப்படையினர் அனுமதிக்கவில்லை என்றும்—

இது தொடர்பாக தமக்கு அறிவித்தல் எதுவும் வரவில்லை என்றும் படையினர் தெரிவித்தனர் என்று வவுனியா ஊடாக வந்த பயணிகள் பலரும் தெரிவித்தனர்.

## ஜெனரேற்றர் மூலம் குடாநாட்டுக்கு மின்சாரம்

கொழும்பு, ஜன. 26

யாழ்ப்பாணத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கான திருத்த வேலைகளை செய்து முடிக்க சுமார் ஓராண்டு காலம் செல்லும் என்றும் — தற்காலிகமாக ஜெனரேற்றர்கள் மூலமாக யாழ்ப்பாணத்துக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் — மின்சாரசபையின் மேலதிக பணிப்பாளர் கூறியதாக 'ரூபவாஹினி' செய்தியில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையான 70 கிலோ மீற்றர் தூரத்துக்கான மின்சார இணைப்பை மேற்கொள்ள தேவையான உபகரணங்களை எடுத்துச்செல்ல கூட்டு நடவடிக்கைகள் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-க-3)

முச்சந்திமுரசு



முட்டுக்கட்டை இல்லை எண்டு சொல்லுகினம்...! ஏன் அப்ப உந்த இழுத்தடிப்பு எல்லாம்...!!

# பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு; யாழ். மக்கள் பெரிதும் பாதிப்பு

### பாண் வாங்கவும் 'கியூ'

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ். மாவட்டத்தில் உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தியாவசிய உணவுப் பொருள்களான அரிசி, மா, சீனி ஆகியவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

கடைகளில் அரசி கையிருப்பு முடிவடைந்துள்ளதால் மக்கள் கடை, கடையாக அலைந்து திரிவதைக் காண முடிகிறது.

பாணுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக மக்கள் பேக்கரிகளின் முன்னால் வரிசையில் நிற்பதையும் அவதானிக்க முடிகிறது.

அன்றாடத் தேவைக்குரிய முக்கிய உணவுப் பொருள்கள் இரண்டுக்கும் ஒரே வேளையில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் மக்கள் பட்டினிக்கு ஆளாகும் ஆபத்து உருவாகியிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. (ஒ-3)

## ஆயுதத்தை ஒப்படைக்க புளொட்டுக்கு உத்தரவு

### மன்னார் ராணுவ அதிகாரிவிடுத்தார்

மன்னார்த் தீவுப்பகுதியில் உள்ள ''புளொட்'' உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் வசமுள்ள ஆயுதங்களை உடன் இராணுவத்திடம் ஒப்படைத்து விடவேண்டும் என்று மன்னார் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி உத்தரவு பிறப்பித்துள்ளதாக ''புளொட்'' வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார்த் தீவில் 'புளொட்' அமைப்பு குறிப்பிட்ட சில வருடங்களாக இயங்கி வருகிறது.

நாற்பதுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இங்கு தங்கி இயக்கப் பிரசாரவேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்பாதுகாப்புக்காக ஆயுதங்களை வைத்திருப்பதற்கு இவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இந்த ஆயுதங்களையே பாதுகாப்பு படையினர் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

உள்நாட்டுப் பிரச்சினை காரணமாக

## அதிக மக்கள் உயிரிழந்த நாடு இலங்கைதான்!

### ஐ. நா. அறிக்கையில் தகவல்

கொழும்பு, ஜன. 26

ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தால் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையில், உள்நாட்டு பிரச்சினைகள் காரணமாக அதிக எண்ணிக்கையில் மக்கள் உயிரிழந்த நாடாக இலங்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த அவப்பெயரை நீக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் அவர் அங்கு பேசும்போது சொன்னார். (ஒ)

## கிராம சேவகர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்

### அமைச்சரவை அங்கீகரித்தது

கொழும்பு, ஜன. 26

கிராம உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட இருக்கிறது. இதற்கான தீர்மானம் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் தர்மசிறி சேனநாயக இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் 14 ஆயிரத்து 850 கிராம உத்தியோகத்தர்கள் பணியாற்றுகின்றனர் எனவும் இவர்களில் 1985 ஆம் ஆண்டுக்குப் பின் கிராம உத்தியோகத்தர்களாகச் சேர்க்கப்பட்ட கமத்தொழில் உத்தியோகத்தர்களும் விசேட சேவை உத்தியோகத்தர்களும் அடங்குவர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதுவரை மாகாண சபையின் கீழ்ப் பணியாற்றிய கிராம உத்தியோகத்தர்கள் இனிமேல் பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சின் கீழ் பணியாற்றுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

( 6 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான பேச்சுக்களில் முட்டுக்கட்டை இல்லை

### அரச தரப்பில் அமைச்சர் தர்மசிறி

கொழும்பு, ஜன. 26

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் முட்டுக்கட்டை எதுவும் ஏற்படவில்லை என்று அரசாங்கத் தரப்பில் அறிவிக்கப்படுகிறது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற, வாராந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளரான, தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா இத்தகவலைத் தெரிவித்ததாக ஏஜென்ஸிச் செய்திகள் அறிவித்தன.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்பட்டதாகக் கூறப்படுவதில் எந்தவித உண்மையும் இல்லைஎன்று அமைச்சர் தெரிவித்தார்.

அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு விடுதலைப் புலிகளின் பதிலுக்கு அரசு காத்திருப்பதாகவும் அமைச்சர் சொன்னார்.

இருத்தந்தை பாப்பரசர் வருகை செய்த பின் புலிகள் அரசுக்கு பதில் தருவர் என்று எதிர்பார்த்தோம். ஆனாலும் புலிகளிடம் இருந்து பதில் வரவில்லை என்பதால் பேச்சுவார்த்தை தடைப்பட்டிருப்பதாக அர்த்தமாகாது என்றும் அமைச்சர் மேலும் கூறினமர்.

இதே வேளை —

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் சமாதானப் பேச்சுக் குறித்து எதுவும் ஆராயப்படவில்லை என்று ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

இதற்கிடையில், பூநகரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தைக் காண்பதற்காக நீண்ட தூரம் செல்லவும் தயார்

### சந்திரிகா பேட்டி

சென்னை, ஜன. 26

நாட்டில் சமாதானத்தைக் காண்பதற்காக மிக நீண்ட தூரம் செல்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

[illegible] கௌரவமோ, தார்மீக [illegible] மாக இருக்கப்போவதில்லை.

— என்றும் ஜனாதிபதி தமது பேட்டியில் கூறியுள்ளார்.

ஜனாதிபதி தமது பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

அரசின் சமாதான முயற்சி [illegible] வெற்றியளிக்கும். புலிகளின் நிலைப்பாடுகள் கூட மாற்றமடையும் என்றுநான்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுக்கள் வார இறுதியில் இல்லை

கொழும்பு, ஜன 26

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான நான்காம் கட்டப்பேச்சுக்கள் வார இறுதியில் நடைபெறமாட்டாது என்று அரசு அதிகாரி கூறியதாக நேற்றைய 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நாளைமறுதினம் சனிக்கிழமைநான்காம்கட்டப்பேச்சுக்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்று செவ்வாய்க்கிழமை 'ஐலண்ட்' பத்திரிகையில் வெளிவந்த செய்தி தொடர்பாகவே அரசு மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளது. (ஒ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். றோட்டறிக் கழகம்
நடத்தும்
சர்வதேச றோட்டறியின்
## 90ஆவது ஆண்டு நிறைவு
## தமிழ் / ஆங்கில
# கட்டுரைப் போட்டி

சர்வதேச றோட்டறியின் 90ஆவது ஆண்டு நிறைவையொட்டி பாடசாலை மாணவர்களுக்கான தமிழ், ஆங்கில கட்டுரைப் போட்டிகளை எமது யாழ். றோட்டறிக்கழகம் நடத்தவுள்ளது.

**தலைப்பு தமிழில்:**

1. றோட்டறி - நட்பின் அடிப்படையில் சேவை.
2. ஈழத்தில் சமூக சேவை - றோட்டறிக் கழகத்துக்குச் சில ஆலோசனைகள்.
3. பொது வாழ்வின் அடிப்படை இலட்சணங்கள்.

**ஆங்கிலத்தில்:**

1. Rotary Service based on Friendship.
2. Peace - The role of Rotary.
3. Youth Exchange and International Understanding.

**போட்டி விதிகள்:**

— 14 முதல் 18 வயது வரையிலான பாடசாலை மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம்.
— கட்டுரைகள் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சில் பொறித்து அனுப்பப்பட வேண்டும்.
— சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.
— கட்டுரையாளரின் பெயர், முகவரி, பிறந்த திகதி என்பன தனித் தாளில் எழுதப்படுவதுடன், கட்டுரையாளர் பாடசாலை மாணவர் என்பதும், கட்டுரை அவருடைய சொந்த ஆக்கம் என்பதும் பாடசாலை அதிபர் அல்லது உப அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
— போட்டிக்கான கட்டுரைகள் அனைத்தும் 1995 பெப்ரவரி 6ஆம் திகதிக்குப் பிந்தாமல் கீழ்க் கண்ட முகவரியில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.
— தமிழ், ஆங்கில கட்டுரைகளில் தனித்தனியே முதல் மூன்று இடங்களைப் பெறும் கட்டுரைகளுக்கான தங்கப்பதக்கப் பரிசில்கள் 90ஆம் ஆண்டு நிறைவு விழாவில் வழங்கப்படும்.
— கட்டுரைகள் அனைத்தும் ''சர்வதேச றோட்டறியின் 90ஆம் ஆண்டு நிறைவு கட்டுரைப் போட்டி'' Essay Contest for 90th Anniversary of Rotary International'' என கடித உறையின் இடதுபக்க மேற்புறத்தில் குறிப்பிடப்பட்டு சேர்ப்பிக்கப்பட வேண்டும்.
— போட்டி முடிவுகள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்:

தலைவர்
யாழ். றோட்டறிக் கழகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-421)



## THE SALVATION ARMY
## 112th ANNIVERSARY
(1883 — 1995)

இரட்சணிய சேனை
## 112-வது ஆண்டு விழாவும்
## கண்காட்சியும்

நன்றி செலுத்தும் ஆராதனை காலை 9 - 00 மணிக்கு நடைபெறும்.

★ தையல் ★ பூ வேலை
★ சிகை அலங்காரம் ★ ஐசிங்
★ ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து 26-01-95 — 27-01-95 வரை இரட்சணிய சேனை இல்லத்தில் இக்கண்காட்சி நடைபெறும்.
★ புதிய வகுப்புக்கள் 01-02-95இல் ஆரம்பமாகும்.

நிர்வாகி
இரட்சணிய சேனை இல்லம்,
கைதடி.

(34855)



யாழ். பல்கலைக்கழகம்
[வெளிவாரி]
G. A. Q.
Ist in Com.
விரிவுரைகள்
**ஆரம்பம்: 18 - 2 - 1995**

**B. A. (Final)**
ஆரம்பம்: **4-2-1995**
**B. A. Part -I** ஆரம்பமாகிவிட்டன
**B. Com Part -I**
ஆரம்பம்: **28-1-1995**

விவரங்களுக்கு:
S. அருள்நங்கை
## புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
[சி-318]


# தலைநகரில் இளைஞர்களிடையே
# போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு

## கொழும்பு மாவட்ட எம். பி. கவலை

கொழும்பு, ஜன. 26
கொழும்பில் போதைப் பொருள் பாவனை கட்டுப்பாடின்றிப் பெருகி வருவதாகக் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லஷ்மன் பிரேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் மட்டும் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் போதைப் பொருள்களுக்கு அடிமையாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கோடி 50 லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியுடைய போதைப் பொருள்களும் கொழும்பில் விற்பனையாவதாகவும் தெருவிக்கப்படுகிறது.

பொலிஸார் எவ்வளவோ முயன்றும் இதனைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடியவில்லை.

போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடும் பெரும் புள்ளி ஒருவர் அதிகாரிகளுக்கு பெருமளவில் லஞ்சம் கொடுத்து வருவதாக கொழும்பு எம். பி. பிரேமச்சந்திர குறிப்பிட்டார்.

போதைப் பழக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் தற்சமயம் ''புரிந்துணர்வு கருத்தரங்குகளை'' நடத்தி வருகின்றனர். (ஐ)

## றோட்டறிக் கருத்தரங்கில் இந்திய நிபுணர்

கொழும்பு, ஜன. 26
இந்திய நிபுணர்கள் பங்குபற்றும் நீரிழிவு நோய் கருத்தரங்கு கொழும்பு றோட்டறிக்கழக ஆதரவில் கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள பொறியியலாளர் நிறுவன மண்டபத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் இரு நாட்கள் நடைபெறவிருக்கின்றது.

சென்னையைச் சேர்ந்த மூன்று நீரிழிவு நோய் நிபுணர்கள் இக் கருத்தரங்கில் உரையாற்றுவர். (இ-3)

## திருமலை துறைமுகம் நவீனமாகும்

கொழும்பு, ஜன. 26
திருமலைத் துறைமுகம் நவீனமயமாக்கப்படும் என்று கப்பல்துறை, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

கப்பல் கட்டும், கப்பல் திருத்தும் தொழிற்சாலைகள் அங்கு அமைக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஓ-3)

## யாழ்ப்பாணத்தில் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 26
தொழில்நுட்பப் பாடங்களுக்கு ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை பரீட்சார்த்திகள் யாழ் வலயம் 1 கல்விப் பணிமனையில் நாளை 27ஆம் திகதி பெற்றுக் கொள்ளலாம் என கல்விப் பணிப்பாளர் அறிவிக்கின்றார். [க]

## ''வணிகஜோதி'' 17 ஆவது மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 26
கனகரத்தினம் ம. ம. வி. வர்த்தக மாணவர் மன்றத்தின் ''வணிகஜோதி'' 17 ஆவது மலர் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை காலை 11-00 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் செல்வன் க. றொக்சன் ஜெகன் தலைமையில் நடைபெறும்.

## இலங்கையில் சவூதி தூதரகம்

கொழும்பு, ஜன. 26
சவூதி அரேபிய தூதரகம் ஒன்று கொழும்பில் விரைவில் திறக்கப்படவிருக்கிறது.

மேற்கண்ட தகவலை வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் வெளியிட்டுள்ளார்.

புனித நோன்புக்கு பின்னர் இந்த தூதரகம் திறக்கப்படலாம் என்றும் அவர் கூறினார். [இ-3]

## இலவச கண்ணாடிகள்

வலிகாமம் தெற்கு, ஜன. 26
மானிப்பாய் பரிஸ் பிரிவைச் சேர்ந்த வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் முந்நூற்று ஐம்பது பேரைத் தெரிவு செய்து இலவச மூக்குக் கண்ணாடிகளை மானிப்பாய் லயன்ஸ் கழகத்தினர் வழங்கி உள்ளனர். மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வைத்து இவர்களுக்கான கண்ணாடிகள் அண்மையில் வழங்கப்பட்டன. [க-152]

## பொதுச்சேவை ஆணைக்குழு

கொழும்பு, ஜன. 26
பொதுச்சேவை ஆணைக் குழுவின் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. திஸ்ஸ தேவேந்திர (தலைவர்), திரு. டபிள்யு. ரீ. ஜயசிங்கா திரு. டி. ஏ பெரேரா, திரு. ஆர் சுந்தரலிங்கம் ஜனாப் எச். எம். பாரூக். திரு. எம். எஸ். டி சில்வா ஆகியோரே அவர்களாவர். (அ)

## இடமாற்றம்

வலிகாமம் தெற்கு, ஜன. 26
சுன்னாகம் அரசினர் மத்திய மருந்துச் சாலையில் பலவருடங்களாக பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் திருமதி பா. சிவானந்தன் ஜனவரி மாதம் முதல் சித்தன்கேணியில் உள்ள பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரியாகவும்—

அங்கு கடமையாற்றிய வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். கணேசலிங்கம் மானிப்பாயில் உள்ள தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் மத்திய மருந்துச் சாலை பொறுப்பதிகாரியாக அம்பாறை மாவட்டம் சேனைக்குடியிருப்பு பகுதியில் கடமையாற்றிய டாக்டர் வி. மகேந்திரன் இடமாற்றம் பெற்றுள்ளார். (க-152)

## நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் திரு. ஆறு. திருமுருகன் பெரிய புராணம் சொற்பொழிவை நிகழ்த்துவார். (க)

## ஆலயங்களில்

உடுப்பிட்டி கொற்றாவத்தை சிறப்பாவளை ஹரி ஓம் நாராயண கோபால கண்ணன் ஆலய வருடாந்த மகா உற்சவ தீர்த்தோற்சவம் இன்று வியாழக்கிழமை நடைபெறும். (ஒ-173)

## வீரவணக்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 26
ஜனவரி மாதத்தில் வீரச்சாவடைந்த மாவீரர் வீரவணக்கக் கூட்டம் இன்று வியாழக்கிழமை இரவு 7 30 மணிக்கு மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் நடைபெறும். கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பிரமுகர்களின் கருத்துரைகளும் நாடகங்களும் இடம் பெறும். (க)

## மாணவருக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25
பாஷையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற சனசமூக நிலையத்தினர் அறிவியல், இலக்கிய உறுப்பெழுத்து புத்தகங்கள் மற்றும் கொப்பிகளை பாடசாலை மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

நிலைய தலைவர் எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை இவற்றை மாணவர்களுக்கு வழங்கினார். (க-17)

## மேலதிக செயலாளராக பற்குணம்

கொழும்பு, ஜன 26
வடக்கு-கிழக்கு மாகாண கல்விகலாசார, விளையாட்டுத் துறை அமைச்சின் மேலதிகச் செயலாளராக திரு. எஸ். பற்குணம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பதவியில் இருந்த திரு. சடாட்சர சண்முகதாஸ் காலமானதை அடுத்தே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ஒ-3)

# தாய் நாட்டுப் பற்றுக் கொண்ட வள்ளல் வைத்திய கலாநிதி பி. எஸ்.

## ஞாபகார்த்தக் கூட்டத்தில் உரை

வலிகாமம் தெற்கு, ஜன. 26
''அறிவுநுட்பம், பரோபகாரசிந்தை, தாராள மனப்பான்மை, கடமைத்திறன் போன்ற உயரிய பண்பாடமைந்த வைத்திய கலாநிதி பி எஸ். சுப்பிரமணியம், வங்காள தேசத்தில் உயர்ந்த சம்பளத்தில் கடமையாற்ற கோரிய போதும் தாய் நாட்டு பற்று மிகுதியால் அதை நிராகரித்து இலங்கையில் கடமையாற்ற முன் வந்தார். சிறந்த நாட்டுப்பற்று கொண்ட வள்ளல் அவர்.''

ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற அமரர் டாக்டர் பி எஸ் சுப்பிரமணியம் ஞாபகார்த்த கூட்டத்தில் ஞாபகார்த்த பேருரையாற்றிய வைத்திய கலாநிதி சி. சிவானந்தராசா இவ்வாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. ஆ. கமலநாதன் தலைமையில் விழா நடைபெற்றது.

வைத்திய கலாநிதி சிவானந்தராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

வைத்தியர்களிடையே ''பி. எஸ்'' தனிப்பெரும் பிறவியாகத் திகழ்ந்தார் அவர் மருந்தை மட்டும் எழுதிக் கொடுத்து விடாது நோயாளியின் குடும்ப நிலைமையை அறிந்து மருந்து வாங்குவதற்குரிய பணத்தையும் கொடுத்து விடுவார் என்றார்.

சங்கானைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தன் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது!

அமரர் ''பி. எஸ்'' சின் வருகையை மக்கள் பெரும் பாக்கியமாக கருதினர். அவரை மனிதருள் தெய்வம் என மக்கள் போற்றினர்.

போக்குவரத்து வசதிகள் இல்லாதிருந்த காலத்தில் கட்டுமரங்களில் கல்கத்தா சென்று கல்வி பயின்றதோடு, சேவை புரிந்த காலத்தில் காட்டுப்பாதைகளூடாக ஈச்சலாம்பற்றை போன்ற கிராமங்களில் கூட சென்று கடமையாற்றியவர் அவர்.

பாடசாலைகளில் மாணவர் கல்வியிலும் அனுமதியிலும் சமத்துவத்தைப் புகுத்தியவர்.

ஏழைகளுக்கு இலவச மருத்துவம், போக்குவரத்து செலவு, கல்விக்கான மாதாந்த செலவுகள் ஆகியவற்றை வழங்கி சேவையாற்றினார் ''பி. எஸ்''

யாழ்ப்பாணம் சிறுவர் பூங்கா, பாஷையூர் தங்கம்மா ஞாபகார்த்த பிரசவ விடுதி, திருநெல்வேலி முத்துத்தம்பி சைவ அநாதைகள் இல்லம், கந்தரோடை சுப்பிரமணிய வாசிகசாலை போன்றன இவரால் நிறுவப்பட்ட பொது சேவை நிறுவனங்களாகும்

அவர் அரசியல், பொருளாதாரம், சமயம், கல்வி, வைத்தியம், சிறுவர் நலன்களில் அதிக ஈடுபாடு கொண்டு உழைத்தவர் எனக்கூறினார்.

உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா, கல்லூரிப் பிரதி அதிபர் திரு. க. புவனேந்திரநாதன், இணைப் பிரதி அதிபர் திரு. இ. ஆனந்தன் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

சங்கீத பூஷணம் திரு. சி. சிவஞானராசாவின் கீதாஞ்சலியும் இடம்பெற்றது. (க-152)


## யாருடையது?

நேற்று எமது ஸ்தாபனத்துக்கு முன்பாக ஸ்ரீசிவகுமாரன் என்பவரால் ஓர் தங்கப் பொருள் கண்டெடுக்கப்பட்டு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

ராஜு ஸ்ரோர்ஸ்,
67, 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(34867)



நாடக அரங்கக் கல்லூரியின்
## ''நாடகமும் அரங்கியலும்''
பாடநெறி
உயர்தரம் (A/L) 96 ஆம் ஆண்டு
மாணவர்களுக்கு
ஆரம்பம் -: **04 02 1995** காலை **8 00** மணி
தொடர்புக்கு: 1048, கே.கே.எஸ் வீதி,
[பூநாறிமரத்தடி]
யாழ்ப்பாணம்.

[34869]



## அறிவித்தல்

யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து.)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
பதிவு இலக்கம் யா / 1639 — 12 - 05 - 1976

## பிரதேச மன்ற உறுப்பினர் அட்டவணை

மேற்படி சங்கத்தின் பிரதேச மன்றங்களின் பிரதேசக் குழு தெரிவுக்கான பிரதேச மன்றப் பொதுக் கூட்டங்கள் விரைவில் நடைபெற இருக்கின்றன. பிரதேச மன்றங்களின் உறுப்பினர் அட்டவணைகள் கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் 28 - 01 - 1995 தொடக்கம் 03 - 02 - 1995 வரை பார்வைக்காக வைக்கப்படும். இவ்வட்டவணைகளில் தன் பெயர் இடம் பெறத் தகுதி பெற்றுள்ள எவரேனும் தனது பெயர் காணப்படாவிட்டால் 10 - 02 - 1995 க்கு முன்னதாக சங்கத்தின் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யும்படி கேட்டுக் கொள்கின்றோம். பிரதேச மன்ற பொதுக் கூட்டங்கள் சம்பந்தமான அறிவித்தல்கள் ஒவ்வொரு உறுப்பினருக்கும் உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்படும்.

1. நல்லூர் பிரதேச மன்றம் — திருநெல்வேலி பால் சேகரிப்பு நிலையம் கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு
2. வலி. கிழக்கு பிரதேச மன்றம் (கோப்பாய்) — உரும்பிராய் பால் சேகரிப்பு நிலையம் பலாலி வீதி, உரும்பிராய் சந்தி
3. வலி. தெற்கு பிரதேச மன்றம் (உடுவில்) — இணுவில் பால் சேகரிப்பு நிலையம் காங்கேசன்துறை வீதி, இணுவில்
4. யாழ்ப்பாணம் பிரதேச மன்றம் — பெருமாள் கோயிலடி பால் விற்பனை - நிலையம் மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
5. சாவகச்சேரி பிரதேச மன்றம் — சாவகச்சேரி பிரதேச செயலர் அலுவலகம் சாவகச்சேரி
6. சண்டிலிப்பாய் - தெல்லிப்பளை பிரதேச மன்றம் — சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அலுவலகம் சண்டிலிப்பாய்
7. வலி. மேற்கு பிரதேச மன்றம் (சங்கானை) — சங்கானை பிரதேச செயலர் அலுவலகம் சங்கானை

குறிப்பு:
அனைத்து பிரதேச மன்றங்களின் உறுப்பினர் அட்டவணைகளை சங்கத் தலைமை அலுவலகத்தில் பார்வையிட முடியும்.

- கௌரவ செயலாளர்.

[சி-435]



## வீட்டுக் கிருத்திய அழைப்பு

திருமதி
### விஜயரட்னம் லிங்காதேவி

24 - 12 - 94 சனிக்கிழமை சிவபதமடைந்த திரு. திருமதி வேலுப்பிள்ளை பத்தரின் அன்பு மகளும், திரு. துரைஐயா விஜயரட்னம் (ஓய்வு பெற்ற அரசாங்க லிகிதர்) அவர்களின் பாசமிகு குடும்பத் தலைவியுமான திருமதி விஜயரட்னம் லிங்காதேவி அவர்களின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் 28-01-95 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அவ்வமயம் தங்கள் அனைவரையும் குடும்ப சகிதம் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

திரு. து. விஜயரட்னம்,
திரு. திருமதி ஈஸ்வரன்,
செல்வன் வி. விஜயநிர்மன்.

சொர்ண வடலி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(34860)



## கண்ணீர் அஞ்சலி

### சின்னத்தம்பி சுப்பிரமணியம்

எமது பள்ளிக்கூட ஆசிரியரும், பா. அ. ச பொருளாளருமாகிய திரு க. நவநேசன் அவர்களின் மாமனார் சின்னத்தம்பி சுப்பிரமணியம் அவர்கள் காலமாகியதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
வேலணை,
யா/ சைவப்பிரகாச வித்தியாலயம்.

[34863]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கப்பூரில்

## 14 இலங்கையர்களுக்கு கசையடியும் சிறையும்

கொழும்பு, ஜன. 26

இலங்கையைச் சேர்ந்த 14 பேர் சிங்கப்பூரில் கைதானார்கள்.

வீஸா முடிவடைந்த பின்னரும் சட்டவிரோதமான முறையில் அங்கு வேலை செய்தார்கள் என்று அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டதாக சிங்கப்பூரில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்தது.

இவர்களில் இருவர் முகவர்களாவர். ஏனையோர் தொழில் தேடுபவர்கள்.

இவர்களுக்கு மூன்று கசையடியும் 12 மாத சிறை தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. [இ 3]

## இடம் பெயர்ந்தோர் புனர்வாழ்வில் தொண்டு நிறுவனங்களுக்கும் பங்கு

### யாழ். வந்துள்ள நிபுணர் குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 26

முகாம்களில் உள்ள இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தும் அரசின் திட்டங்களில் அரசசார்பற்ற நிறுவனங்களை பங்காளிகளாக இணைத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இணையப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது யாழ். வந்துள்ள புனரமைப்பு செயற்திட்ட நிபுணர் குழுவினர் இத் தகவலைத் தெரிவித்தனர். நிபுணர் குழுவில் கலாநிதி ஏ.எஸ். குணசிங்கம், சமூக சேவையாளர் அஜித் ரூபசிங்கா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள் தற்போது மேற்கொண்டு வரும் செயல் திட்டங்களையும் அவர்கள் கேட்டறிந்து கொண்டனர்.

முகாம்களில் உள்ள ஆயிரம் ரூபாவிற்கு குறைந்த வருமானமுடையவர்களை மீளக்குடியமர்த்தும் அரசின் திட்டம் சமாதானமான சூழ்நிலை யாழ் குடாநாட்டில் ஏற்பட்டாலே சாத்தியப்படும் என்று குழுவினர் தெரிவித்தனர்.

இவர்களை மீளக்குடியமர்த்துவதற்கு ஒரு குடும்பத்திற்கு அரசு ஒதுக்கியுள்ள 15 ஆயிரம் ரூபாவை 30 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு தாம் அரசை கோரியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மீளக்குடியமர்வின் பின் அவர்களின் வளங்களை அறிந்து எப்படியான சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்பது பற்றியும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் குழுவினர் கேட்டறிந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## மாத்தறை பொலீஸ் நிலையத்தில் திருட்டு!

கொழும்பு, ஜன. 26

மாத்தறை பொலீஸ் குற்றப் புலனாய்வு நிலையத்தில் உள்ள அறையில் வைக்கப்பட்டிருந்த 10 ஆயிரத்து 48 ரூபா பணமும் பொலீஸ் சிருடைப் பெட்டி ஒன்றும் திருடப்பட்டுள்ளன.

சிருடைப் பெட்டியையும் பணத்தையும் திருடிச் சென்றோர் அதில் உள்ள பொருள்களை எடுத்துக் கொண்டு வெறும் பெட்டியை ஒதுக்குப்புறமான பகுதியில் எறிந்து விட்டுச் சென்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக அங்கு கடமையாற்றும் பொலீஸ் கான்ஸ்டபிள்கள் இருவரை மாத்தறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## அரசு- புலிகள் பேச்சில் ஐ. தே. க. தலையிடாது

### ரணில் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 26

''அரசுக்கும்- விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சு வார்த்தைகளில் ஐ. தே. க. தலையிட மாட்டாது.''

ஐ. தே. க தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு ஐ. தே. க. தடையாக இருக்கமாட்டாது என்றும் அவர் கூறினார். (இ-3)

## யாழ் -பருத்தித்துறை வீதி பஸ் சேவை தாமதம்

### ஆசிரியர் - மாணவர் பாதிப்பு

அச்சுவேலி, ஜன. 26

யாழ்ப்பாணம் — அச்சுவேலி, நெல்லியடி பிரதான வீதியில் காலை வேளையில் உரிய நேரத்துக்கு பஸ் சேவை இல்லாமையினால் நீர்வேலி, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி பகுதி பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள், மாணவர்கள் சிரமப்படுகின்றனர்.

ஆசிரியர்கள் நீண்ட நேரம் பஸ் தரிப்பு நிலையங்களில் காத்திருக்கவேண்டி இருப்பதாகவும் உரிய நேரத்திற்கு செல்ல முடியாமையால் ஆசிரியர்கள் அடிக்கடி லீவு பெறுவதாகவும் கூறப்படுகின்றது.

## கண்காணிப்புக் குழு வவுனியா செல்லும்?

### கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு, ஜன. 26

அரசுக்கும் — விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைமுறையில் இருக்கும் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டைக் கண்காணிக்கும் குழு வவுனியாவுக்கு விஜயம் செய்யவிருப்பதாக கொழும்புப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

3ஆம் கட்டப் பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகளால் விடுக்கப்பட்ட இரு கோரிக்கைகள் குறித்து எழுத்து மூலம் பதில் கிடைத்த பின்பே கண்காணிப்புக் குழு வடக்குக்கு வருவது குறித்து முடிவு செய்ய முடியும் என்று விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் அரச பிரதிநிதிகளிடம் தெரிவித்திருந்தனர்.

இதுவரை அது குறித்த பதிலை விடுதலைப் புலிகளுக்கு அரசு அனுப்பாத நிலையில் —

வடக்குக்கான கண்காணிப்புக்குழு வவுனியா வரவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## கல்லூரி நூலகத்துக்கு 50 ஆயிரம் ரூபா

கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரி நூலகத்துக்கு யாழ். செயலகநிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

யாழ் அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் இந் நிதியை வழங்கினார்.

## அரசமைப்பு நகல் குறித்து அரசியல்வாதிகள் கருத்து

கொழும்பு, ஜன. 26

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு சமர்ப்பித்துள்ள அரசமைப்புத் திருத்த நகல் சட்டம் குறித்து அரசியல் கட்சித் தலைவர்கள் பலர் தங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

உத்தேச புதிய அரசமைப்பு திருத்த சட்டத்தின் படி தேர்தல் தொகுதிகள் இயங்கவுள்ள முறை குறித்தும்

மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் எவ்வாறு பரவலாக்கப்படும் என்பது பற்றியும் நகலில் எதுவும் தெரிவிக்கப்படாதது குறித்து மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஸ்குணவர்த்தன [illegible].

இந்த முக்கிய விடயங்கள் குறித்து அரசு தாமதமின்றி விவரங்களை வெளியிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து மீண்டும் நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்துவது என்பது பொ.ஐ. முன்னணியின் முக்கிய தேர்தல் வாக்குறுதியாகும்.

இதனைச் செய்ய ஏற்கனவே மக்கள் ஆணை வழங்கிவிட்டனர். எனவே மீண்டும் அவர்களது கருத்தை கோரவேண்டியது அவசியமில்லை என்று நவசமசம ஜக் கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் காலாநிதி சுனில் ரட்னசிறி தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியைச் சேர்ந்த நிஹால் கலப்பதி கருத்து தெரிவிக்கையில் ஜனதாவிமுக்தி பெரமுனவும், முற்போக்கு முன்னணியும் உத்தேச அரசமைப்பு திருத்தச் சட்ட நகல் குறித்து ஆராய்ந்து வருகின்றன என்றார். (ஐ)

## நால்வரை கடித்த விசர் நாய்

வடமராட்சி, ஜன. 26

வடமராட்சி கிழக்கு மாமுனை வடக்கில் ஆவேசம் கொண்ட விசர் நாய் ஒன்று நால்வரைக் கடித்தது.

கடந்த திங்கட்கிழமை இச் சம்பவம் நிகழ்ந்தது.

ஒரு மாணவன், ஒரு ஆசிரியர், ஒரு வயோதிபர், ஒரு பெண் ஆகிய நால்வரையும் கடித்த இவ் விசர் நாயை திங்கள் முதல் இப்பகுதி மக்கள் தேடி வருகின்றனர்.

விசர் நாய்க் கடிக்குள்ளான ஆசிரியரும், மாணவனும் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையிலும் —

மற்றைய பெண்ணும், வயோதிபரும் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (இ-178)

## புலிகளின் குரல் வானொலியில்

26 — 01 — 1995

வியாழன் இரவு

- ★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-10 — சித்தமருத்துவ குறிப்புகள்
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம்- நிகழ்ச்சியில் ''நீர்வளம் காத்து நிலவளம் பெருக்கமுனையும் உட்கட்டுமானம்'' சித்திரம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தாயகப் பாடல்கள்
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவுபெறும்.

27 — 01 — 1995

வெள்ளி காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7 15 — மணிபாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள்
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவுபெறும்

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

வியாழன் மாலை

- ★ 5-01 சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக்கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 - இசையும் கதையும்—''நடந்து வந்த பாதை''
- ★ 5-50 — தமிழீழ கானங்கள்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — பொன் விளையும் பூமி— நிகழ்ச்சியில் வ. வசந்தகுமார் எழுதிய ''வேர்கள்''—நாடகம்- தயாரிப்பு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — கேள்வி பதில்கள்—விளையாட்டுத் தொடர்பானவை
- ★ 6-25 — என் தெரிவு
- ★ 6-30 — மணிக்குமாலை நிகழ்ச்சிகள் நிறைவுபெறும்.

# நேபாள கம்யூனிஸ்ட் அரசு நீண்டகாலம் நிலைக்குமா?

நேபாளத்தில் நவம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நேபாள கம்யூனிஸ்ட்டுகள் வெற்றி பெற்றது தெரிந்ததே. நாடாளுமன்றத்துக்கான 205 ஆசனங்களில் 88 ஆசனங்களை அவர்களின் கட்சியான ஐக்கிய மார்க்ஸிஸ்ட் - லெனிஸ்ட் கட்சி கைப்பற்றியது.

அறுதிப் பெரும்பான்மைக்கு 12 ஆசனங்கள் குறைவு என்றாலும் நேபாள காங்கிரஸ் கட்சியை விட அக்கட்சி ஐந்து ஆசனங்களைக் கூடுதலாகப் பெற்றது. தீர்க்கமான இருபது ஆசனங்கள் முடியாட்சி சார்பான தேசிய ஜனநாயக கட்சிக்கு கிடைக்க எஞ்சிய ஆசனங்கள் சில்லறைக் கட்சிகளுக்கும் சுயேச்சைகளுக்கும் கிடைத்தன.

தேர்தல்களைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பேரம் பேசுவது தீவிரமாக நடைபெற்றது. சிறு கட்சிகளையும் தேசிய ஜனநாயக கட்சியையும் வெற்றி கொள்ளும் ஒரு முயற்சியாக தனது கடுமையான சித்தாந்த நிலைப்பாட்டை ஐக்கிய மார்க்ஸிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சி கைவிட்டது.

பொருளாதார தாராளமயமாக்கல், பல கட்சி ஜனநாயகம், நடைமுறையிலுள்ள அரசியல் சட்ட முடியாட்சி ஆகியவற்றுக்கு தனது ஆதரவை அக்கட்சி பிரகடனப்படுத்தியது. கடந்த காலங்களில் நேபாள காங்கிரஸ் அரசாங்கம் செய்த அனைத்தையும் அது செய்யும் என ஒரு வார்த்தையில் கூறலாம்.

முடியாட்சியினரான தேசிய ஜனநாயக கட்சியினரை இந்த நல்லெண்ணங்கள் கவரவில்லை. தனது கட்சி கூட்டு சேருவதைக் காட்டிலும் 'தனித்தே செல்லும்' என்ற அடிப்படையில் நேபாள காங்கிரஸ் கட்சியுடனேயோ அல்லது மார்க்ஸிட் - லெனினிஸ்ட் கட்சியுடனேயோ கூட்டு சேருவதை தேசிய ஜனநாயகக் கட்சியின் தலைவியான திருமதி எஸ். பி. தாப்பா நிராகரித்துவிட்டார்.

நேபாள காங்கிரஸ் கட்சி இரண்டு முகாம்களாகப் பிளவுபட்டுள்ளது. மார்க்ஸிஸ்ட் லெனினிஸட் அரசாங்கத்துடன் பங்காளியாவதை ஒரு முகாம் ஆதரிக்க மற்ற முகாம் எதிர்க்கட்சியில் இருக்க உறுதி கொண்டது. நாம் எதிர்தரப்பில் இருக்க வேண்டுமென மக்கள் உணர்த்தியுள்ளனர் என்று பதவியை விட்டு வெளியேறும் பிரதமர் ஜி. பி. கொய்ராலா கூறினார். இறுதியில் அவரது கருத்தே நிலைத்தது.

இரண்டு அல்லது அதற்கு கூடுதலான கட்சிகளின் கூட்டரசாங்கம்ஏற்பட தவறுமிடத்து நாடாளுமன்றத்தில் கூடுதலான ஆசனங்களைக் கொண்ட கட்சியின் தலைவரால் [illegible] அரசாங்கம் அமைக்கப்பட அரசமைப்புச் சட்டம் வழிவகுக்கிறது.

இதன்படி, மார்க்ஸிஸ்ட்- லெனினிஸ்ட் கட்சியின் தலைவரான 74 வயது மன்மோஹன் அதிகாரியை நேபாளத்தின் முதலாவது கம்யூனிஸ்ட் அரசாங்கத்துக்கு தலைமை வகிக்க மன்னர் பிரேந்திரா நியமித்தார்.

### இருள் சூழ்ந்த எதிர்காலம்

எவ்வாறாயினும் எதிர்காலம் மிக இருள் சூழ்ந்ததாகவே உள்ளது. பதவியில் உயிர்வாழ்வதற்காக பிரதமர் மன்மோஹன் அதிகாரியின் சிறுபான்மை அரசாங்கம் ஏனைய கட்சிகளுக்கு சினமூட்டக்கூடியஎதனையும் செய்யாதிருக்கலாம்.

ஆனால்,இது செயலற்ற ஒரு அரசாங்கத்தையே உருவாக்கும். மார்க்ஸிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சியின் தீவிர இடதுசாரி அணியை இது திருப்திப்படுத்தாது போகலாம். தலைமைக்கு எதிரான கிளர்ச்சியை இது ஏற்படுத்த முடியும்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஏற்கனவே நேபாள புதிய அரசாங்கத்துடன் உறவு கொண்டுள்ளது. காட்மண்டுவில் உள்ள இந்தியத் தூதரகமும், இந்திய அரசியல்வாதிகளும் தேர்தல் நடைமுறையில் வேண்டுமென்றே தலையிட்டதாக பிரதமர் மன்மோஹன் அதிகாரி குற்றஞ்சாட்டியுள்ளார். இக்குற்றச்சாட்டை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பூரணமாக ஆதரிக்கிறது.

இந்திய — நேபாள உறவுகள் குறித்த நேபாள மக்களின் மனக்குறைகள் கம்யூனிஸ்டுகளின் வெற்றிக்கு ஒரு காரணமாக கொள்ளப்பட வேண்டும்.

தாராளமான ஒரு அயல் நாட்டுக்குப் பதிலாக நேபாளத்துடன் ஒரு கடும் போக்குடன் இந்தியா அடிக்கடி நடந்து கொள்வதாக அவர்கள் கருதுகிறார்கள்.

இந்தியாவின் அதிகாரிகளும், வர்த்தகர்களும் விதிவிலக்குடன் நேபாள சட்டத்தையும் இறைமையையும் மீறியுள்ளனர். ஒரு தடவை, இந்தியப் பொலீஸார் முன் அனுமதி பெறாமலேயே காட்மண்டுவில் ஒருவீட்டைச் சோதனை யிட்டனர்.

### இந்தியாவை சாந்தப்படுத்த முயலும் போக்கு

கொய்ராலாவின் நேபாள காங்கிரஸ் அரசாங்கம் புதுடில்லியை சாந்தப்படுத்த எப்பொழுதும் முயற்சிப்பதாக நேபாளத்தில் ஒரு கருத்து இருந்தது.

நேபாளத்தின் தனக்பூரில் ஒரு அணைகட்டுவது தொடர்பாக இரு நாடுகளினதும் அரசுகள் மத்தியில் ஏற்பட்ட ஒப்பந்தமே நேபாள மக்களை மிகவும் கிளர்ந்தெழச் செய்தது.

நேபாளத்தைக் காட்டிலும் இந்தியாவுக்கே கூடுதலான நன்மையை அத்திட்டம் வழங்கும் என்று சந்தேகிக்கப்பட்டது. இதைவிட, நேபாள பிரதேசத்தில் ஒரளவு நிலத்தை அந்நியப்படுத்துவதாகவும் ஒப்பந்தம் அமைந்தது. இதை பெரும்பாலான அரசியல் கட்சிகள் எதிர்த்தன. சர்வதேச ஒப்பந்தங்களில் செய்யப்படுவது போல தனக்பூர் [illegible]ட்டம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று மார்க்ஸிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சி கோரியது.

நேபாள உயர் நீதிமன்றம் இக் கருத்தை ஏற்றுக் கொண்டது ஆனால், கொய்ராலா இவ் விவகாரத்தை தவிர்த்தே வந்தார். இந்திய நிர்ப்பந்தமே இதற்கு காரணமென ஊகிக்கப்பட்டது.

தனக்பூர் விவகாரத்தை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள புதிய கம்யூனிஸ்ட் அரசாங்கம் பெரும்பாலும் முயற்சிக்கலாம்.

தனது அரசாங்கம் இந்தியாவுடனும் அவ்வாறே சீனாவுடனும் சம நிலையான உறவைப் பேணும் என்று பிரதமர் மன்மோஹன் அதிகாரி கூறியுள்ளார். இந்தியாவுக்கும், மேற்கு நாடுகளுக்கும் இது கவலையளிக்கும் விடயமாகும்.

1950 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கும், நேபாளத்துக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் திருத்தப்பட நேபாள மார்க்ஸிஸ்ட் — லெனினிஸ்ட் கட்சி வற்புறுத்தலாம்.

கடந்த 40 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலம் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு, பொருளாதார உறவுகளை இந்த ஒப்பந்தம் ஒழுங்கமைத்து வந்துள்ளது.

அவ்வாறான ஒரு திருத்தம், வெளிவிவகார உறவுகளை மேற்கொள்வதில் இந்தியாவில் நேபாளம் தங்கியிருப்பதை குறையச் செய்யும் என வாதிடப்படுகிறது.

### ''மாவோ'' சித்தாந்தம்

மார்க்ஸிஸ்ட்- லெனினிஸ்ட் கட்சியின் பரீட்சார்த்தம் ஒரு சில மாதங்களுக்கோ அல்லது ஓராண்டுக்கோ கூடுதலாக நீடிக்காது போகலாம்.

## கூட்டணிக் கட்சிகளை திருப்திப்படுத்த கொள்கைகளைக் கைவிட்டது

நேபாள காங்கிரஸ் கட்சியைப் போன்றே இக்கட்சியும் உட்கட்சிப்பூசல்களால் பிளவுபட்டுள்ளது

பழைய கம்யூனிஸ்ட் வாதியான பிரதம மன்மோஹன் அதிகாரி மிக இளகிய போக்குள்ளவராக அவரது இளம் சகாக்கள் சிலரால் கருதப்படுகிறார்.

கடந்த காலங்களில் கிராமத் தலைவர்களுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் எதிராக கொலைக் குழுக்களை இவர்களில் சிலர் வைத்திருந்தனர். துப்பாக்கிகளின் குழாய்களில் இருந்தே அதிகாரம் பிறக்கிறது என்றும் மாவோ சித்தாந்தத்தையே ஒரு சிலர் இன்னமும் கைக்கொள்கின்றனர்.

இந்த 'சிவப்பு பரீட்சார்த்தம்' தோல்வியுற்றால் இச் சக்திகள் நாட்டில் அமைதியின்மையும் வன்முறையையும் தூண்டிவிடலாம். தமது தோல்விக்கு கம்யூனிஸ்டுகள் இந்தியா தொடர்பாக எந்த ஒரு உண்மையான அல்லது கற்பனையான நோக்கங்களைக் கற்பிப்பார்களேயானால் மோசமான காட்சியைக் காணக்கூடியதாக இருக்கும்.

மொத்தத்தில், இந்திய- நேபாள உறவுகளில் ஒரு [illegible] நேபாள தேர்தல் தோற்றுவித்துள்ளது. ★

## இராணுவ நீதிமன்றின் விசாரணைக்கு சிப்பாய்கள்

கொழும்பு, ஜன. 26

அலரிமாளிகையில் வெடிமருந்து கண்டு பிடிக்கப்பட்ட விவகாரம் குறித்து இரு இராணுவச் சிப்பாய்களை இராணுவ நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து கடந்த பதினொரு தினங்களாக விசாரணை நடைபெற்றதாகவும்—

வெள்ளவாயா குடாஓயா இராணுவ முகாமில் பயிற்சி பெறும் ராணுவச்சிப்பாய் ஒருவரால் மீனவருக்கு மீன் பிடிக்க பயன்படுத்துவதற்காக இந்த வெடிபொருள் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டதாகவும்—

இது தொடர்பாக 25 ஊழியர்களிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாகவும்— கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (இ-3)

## அனுராவுக்கு பெண் தேடுகிறார் சிறிமா!

கொழும்பு, ஜன. 26

தமது மகனான அனுரா பண்டாரநாயக்காவுக்கு பெண் பார்க்கும் படலத்தை தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆரம்பித்திருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

எகிப்தில் இடம்பெற்ற விபத்தில் காயமுற்ற பின்னர் தற்போது தமது றொஸ்மிட் பிளேஸ் இல்லத்தில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் அனுரா பண்டாரநாயக்காவை அவரது தந்தையாருக்கு நெருக்கமாகவிருந்த இரு தேரர்கள் கடந்த வாரம் சந்தித்துப் பேசினர்.

அனுராவின் எதிர்காலம் சிறப்பாக அமையும் என்றும், அவர் நாட்டின் தலைவராக வருவார் என்றும் குறிப்பிட்ட அந்த பிக்குகள், அதற்கு முதலில் அனுரா திருமணம் செய்ய வேண்டும் என வலியுறுத்தினர்.

அதனை ஏற்றுக் கொண்ட அனுரா திருமணத்துக்கு இணக்கம் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

''நீங்கள் விரைவில் திருமணம் செய்ய வேண்டும். நாட்டுக்கு மேலும் பல பண்டாரநாயக்காக்கள் தேவைப்படுகின்றனர். இங்கு குமாரதுங்கக்கள் இருக்கிறார்கள்; இப்போது தேவை பண்டாரநாயக்காக்களே!'' என அந்த பிக்குகள் அனுராவுக்கு ஆலோசனை தெரிவித்தனராம். (உ)

## உலக, ஆசிய அபிவிருத்தி வங்கிகளின் திட்டங்கள் மந்த கதியிலேயே அமுல்

கொழும்பு, ஜன. 26

உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் அவற்றின் உதவியுடன் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களின் மந்தகதியிலான போக்கு பற்றி கவலை தெரிவித்துள்ளன. இந்த இரண்டு நிறுவனங்களும் இலங்கைக்கு உதவி வழங்கும் அமைப்புக்களில் அடங்குகின்றன.

இந்த இரண்டு நிறுவனங்களும் கடந்த சில தசாப்தங்களாக நூற்றுக்கணக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய் [illegible] வழங்கியுள்ள போதிலும் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட தன்வீதம் மிகவும் குறைவாகவே இருக்கிறது என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் அறிக்கை கூறுகிறது.

இலங்கையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியோடு ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களில் சுமார் 50 சதவீதமானவை மாத்திரமே பொதுவாக வெற்றியடைந்துள்ளன என்று இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

வெற்றியடைந்துள்ள திட்டங்கள் மொத்த முதலீடுகளின் 34 சதவீதமானவை மாத்திரமே என்று இந்த அறிக்கை கூறுகிறது.

உலக வங்கியும் அதன் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி இதே கருத்தை தெரிவித்திருக்கிறது.

1981 ஆம் ஆண்டு 11 சதவீதமாக இருந்த திட்டங்கள் 1991 ஆம் ஆண்டில் 20 சதவீதத்திற்கு அதிகரித்தன. வெற்றியளித்துள்ள திட்டங்கள் 1981 ஆம் ஆண்டில் 80 சதவீதத்திலிருந்து 1991 ஆம் ஆண்டில் 65 சதவீதத்திற்கு குறைந்துள்ளன. இந்த மந்தகதியான போக்கு பற்றி பரிசீலனைசெய்வது வருங்காலத்தில் இட்டமிடுவதற்கு மிகவும் முக்கியமானது என்று நிதி திட்டமிடல் அமைச்சின் ஸ்ரேஷ்ட ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார். (க-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பொமனேரியன் ஒரு வயது நிரம்பியவை ஆணும், பெண்ணும் கூட்டுடன், மற்றும் பால் ஆடும் விற்பனைக்கு உண்டு. ஜெகதீஸ்வரன், லூக் வைத்தியசாலை, சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய். [34857]

### எரு விற்பனைக்கு

எமது சங்கத்தில் எரு விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் பார்வையிட்டு கூறுவிலையை 31-1-1995க்கு முன் தபால் உறையில் எரு விற்கான கூறுவிலை என எழுதி சமர்ப்பிக்கவும். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி–428)

### துர்க்கா திருமண சேவை

எல்லா மதத்தவர்களும் தொடர்புகொள்ளவும். சகல குறிப்புகளும் உண்டு. எல்லா நாட்களிலும் படம் குறிப்புடன் தொடர்புகொள்ளலாம். தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: துர்க்கா திருமண சேவை, 'வளர்மதி இல்லம்', கே. கே எஸ். றோட், மல்லாகம். [7875]

### மணமகள் தேவை

யாழ் இந்து, 32 வயது, செவ்வாய்க் குற்றமற்ற உத்தராடம், 1ஆம் பாதம், ஜேர்மனியில் 13 வருடங்களாக Electro Welding Technician ஆக பணி புரிபவருக்கு A/L படித்த 26—30 வயதிற்கு இடைப்பட்ட பெண் தேவை. விவாகத்தை சித்திரை மாதம் யாழ்ப்பாணத்தில் நடத்த முடியும். தொடர்பு: இல 753, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [34854]

### ரி. வி., டெக் திருத்துநல்

சகல றேடியோக்கள் ரி வி டெக் எல்லா விதமான மணிக்கூடுகளையும் பழுது பார்த்துக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம்சந்தி], யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. [சி–254]

### தவறிவிட்டது

23–01–1995 அன்று சுன்னாகம் சந்திக்கும் மாகியப்பிட்டிச் சந்திக்கும் இடையில் ஒரு கைச்சங்கிலி தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். கிராம சேவையாளர், அளவெட்டி மேற்கு. [7876]

### POLITICAL SCIENCE

G. C E. A/L and B. A. இலங்கையின் தேர்தல்கள், 94 பொதுத்தேர்தலும், சிறுபான்மை இனங்களும், இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சி தெரிவு செய்யப்பட்ட நாடுகள், கட்சிமுறைகளும், உள்ளூராட்சி முறைகளும் வெளிநாட்டு கொள்கைகளும் இவ் ஐந்து புத்தகங்களின் ஆக்கம்: பீ. எம். புன்னியாமீன் B. A. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி–295)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 03 — 06 — 1906

மறைவு: 27 — 12 — 1994

### அமரர் கனகசபை கந்தையா

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மை பண்போடும், அன்போடும் வழிநடத்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அரியாலை,
யாழ்ப்பாணம். (8210)

## 9-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

### பொன்னம்பலம் உமாபரன்

(யாழ். இந்துக் கல்லூரி க. பொ. த. உயர்தர- இறுதி ஆண்டு மாணவன்)

தோற்றம்: 14–05–1965 மறைவு: 04–02–1986

திதி: 26 – 01 – 1995

எங்கள் குடும்பத்தில் கடைசிப் பிள்ளையாய் பிறந்தீர். செல்லமாக வளர்ந்தீர். ஆர்வத்துடன் கல்வி பயின்றீர், உங்கள் எதிர்காலத்தை நாங்கள் கற்பனை பண்ணிக்கொண்டிருந்த வேளையில், நீங்கள் இறைவனடி சேர்ந்து விட்டீர்கள் ஐயா! உங்களைக் கற்பனையில் காண்கின்றோம். செயலிழந்து வாழ்கிறோம். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அப்பா, அம்மா, அண்ணன்மார்,
அக்காமார், அத்தான்மார், அண்ணிமார்,
மருமக்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

215, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். [34830]

### இசைவிழா

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 37 ஆவது தமிழ் இசை விழா பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் 5 நாட்களுக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் தினமும் மாலை 4 மணி முதல் நடைபெறும். (க)

### அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம் ஜன. 26

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து கடந்த 1994 ஆம் ஆண்டு மட்டும் 22 ஆயிரம் பேர் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களில் 21 ஆயிரம் பேருக்கு ஆட்பதிவுத் திணைக்களம் அடையாள அட்டைகளை அனுப்பி வைத்துள்ளது. [க–17]


## கல்வியின் கருவூலம் மட்டுமல்ல;
## பண்பின் விளைநிலமும் இதுதான்!

க.பொ.த சாதாரணதரம்
பகல்முழுநேரவகுப்பு

# யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

ஆரம்பம்: 27-01-1995 காலை 8.30 மணி

(சி/419)


### யாழ். வணிகர் கழகம்

## பொதுச்சபைக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

காலம்: 27 — 01 — 1995 வெள்ளிக்கிழமை
நேரம்: பிற்பகல் 2.30 மணி
இடம்: யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபம்

விடுதலைப் புலிகளின் அரசியல்துறை, தொழிற்துறை உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள். கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சகலதுறை வணிகப் பெருமக்களும் தவறாது சமுகம் கொடுக்கவும்.

சகல வணிக நிலையங்களையும் அன்று பிற்பகல் 2-00 மணியுடன் முழுமையாகப் பூட்டி இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி, வணக்கம்

இங்ஙனம்:

தலைவர், செ.வே. சிற்சபேசன்.
பொதுச் செயலாளர், நா.த. அன்னலிங்கம்.
(சி–431)

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 23 — 09 — 1932

விண்ணில்: 06 — 02 — 1994

திருமதி

### நாகலிங்கம் சிவபாக்கியம்

திதி 26 – 01 – 1995
(வியாழக்கிழமை

கண்ணிலே நின் உருவம் — எம்
காதிலே நின் உரைகள்
நெஞ்சிலே நின் நிழற்படங்கள் — நித்தம்
நம் மனதிலே நின் நினைவலைகள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்;

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்,
உற்றார். உறவினர்கள்:

932/21, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (34827)

நெஞ்சில் உறுதியும் நேர்மையும் கொண்ட
அமரர் ச. அம்பிகைபாகன்
அவர்களின்

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 03 — 05 — 1908

உதிர்வு: 26 — 01 — 1986

வாழ்வு முழுவதையும் அறிவு மயமாகவும் ஞான மயமாகவும் ஆக்கிக் கொண்டு வாழ்ந்த பெருந்தகை அமரர் அம்பிகைபாகன் அவர்கள்.

''நல்லார் இணக்கமும் நின்பூசை ஞானமும்
அல்லால் வேறொன்றும் அறியேன்''

என்ற அருள் மொழியைத் தன் வாழ்வில் அமைத்துக் கொண்டவர். கடந்த காலங்களில் எமது மண்ணில் போற்றப்பட்ட பேரறிஞர்களையும் தவயோகிகளையும் தனக்கு முன்மாதிரியாக வைத்து வாழ்ந்தவர். இராமகிருஷ்ண பரமஹம்சரிடத்திலும் கொழும்புத்துறை யோகர் சுவாமிகளிடத்திலும் நீங்காத பக்தி கொண்ட இப்பெரியார், தனது அதிபர் பதவிக் காலத்திலும் மாணவர்களிடையே இவ் வொழுங்கு முறையை வளர்த்தவர். மல்லாகம், தெல்லிப்பழை, சுன்னாகம் ஆகிய இடங்களில் அமைந்த திருக்கோயில்களில் புராணபடனம், திருமுறை ஓதல் ஆகிய பணிகளுக்கு ஊக்குவிப்புக் கொடுத்தவர். கல்வி உலகுக்கும் ஆன்மீக சமூகத்துக்கும் இவர் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தமையை இந்நாடு என்றும் மறக்க முடியாது. எனவே இவர் நாமம் என்றும் புகழ் நாமமாக அமையுமன்றோ!

ஆக்கம்:
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

உங்கள் நினைவோடு வாழும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்-

[illegible]
மல்லாகம்.
[illegible] [7873]

ஊரெழு

## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம்

30-01-95 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 02-95 புதன் தேரும், 16 - 02 - 95 வியாழன் தீர்த்தமும் நடைபெறும். வீதியில் உள்ள கடைகள் 28-01-95 சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு ஏலத்தில் விடப்படும்.

தலைவர்,
ஆலய நிர்வாக சபை.
(8212)


## DIPLOMA IN COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE
4 MONTHS

திங்கள், புதன் வகுப்புக்கள்

ஆரம்பம்: 30 - 1 - 1995
10-30 மணி.

Lectures by:
S. P. Sivapathasundaram
M. I. D. P. M [Lond.]

★ கட்டணம் தவணை முறையில் மாதம் ரூபா 400/- மட்டுமே.
★ அச்சடித்த பாடக்குறிப்புகள் இலவசம்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்
★ Short-Hand & Typing, LOTUS 1-2-3 புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
★ C.I.M A., I.A B. நடைபெறுகின்றன.

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET, JAFFNA.
(சி–434)


## 2ஆம் ஆண்டு நினைவு தினம்



மலர்வு: 01 — 01 — 1915

உதிர்வு: 26 — 01 — 1993

அமரர்

### சீமாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

(இளைப்பாறிய அஞ்சலக ஊழியர், கரவெட்டி)

எம்மை விட்டுப் பிரிந்து இரண்டாண்டுகள் ஆகியும், எங்கள் இதயம் விட்டகலாத உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
மைத்துனர்மார், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

''றாஜ் மகால்,''
கன்பொல்லை வீதி.
கரவெட்டி. [சி–436]

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 15 — 12 — 1918

மறைவு: 26 — 01 — 1994

### அமரர் சிற்றம்பலம் சின்னத்தம்பி

(ஓய்வு பெற்ற ஆசிரியர், நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம்)

எங்களைப் பிரிய உங்களால் எப்படி முடிந்தது
உங்களை மறக்க எங்களால் எப்படி முடியும்?
உங்கள் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்:
— குடும்பத்தினர்.

ராசாவின்தோட்டம்,
யாழ்ப்பாணம். (34837)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## சந்திரிகா மாறுவாரா?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்திலும், அதன் பொருட்டு விடுதலைப் புலிகளுடன் தொடங்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வதிலும் அரசின் அணுகுமுறையும் செயற்பாடுகளும் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தை உருவாக்குவதாக இப்பத்தியில் அடிக்கடி சுட்டிக்காட்டி வருகிறோம்.

இது விடயங்களில் அரசின் நேர்மையையும், அக்கறையையும் கூடத் தமிழர்கள் சந்தேகிக்கும் விதத்திலேயே அரசின் நடவடிக்கைகள் அமைந்துள்ளதையும் எடுத்துக்காட்டியுள்ளோம்.

தமிழர்கள் மத்தியில் மட்டுமன்றி, சிங்களவர்கள் மத்தியிலும் அரசின் செயற்பாடுகள் நம்பிக்கையின்மையை தோற்றுவித்துள்ளது எனலாம். நவசமசமாஜக்கட்சியின் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணரத்னா வெளியிட்டுள்ள கருத்து அதனையே பிரதிபலிக்கிறது.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அரசிடம்நேர்மை இல்லை என்று கலாநிதி விக்கிரமபாகு வெளிப்படையாகவே சாடியுள்ளார். இக்கட்சியைப் போலவே தெற்கில் உள்ள இன்னும் பல வட்டாரங்களும் அரசின் செயற்பாடுகளில் அதிருப்தி அடைந்துள்ளன என்று தெரிய வந்துள்ளது.

மிகக் குறிப்பாக, ஜனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, போருக்கு முடிவு கட்டுவார் என்று எதிர்பார்த்த வட்டாரங்கள், ஜனாதிபதியின் "இயலாமை" கண்டு வெறுப்படைந்துள்ளன.

இனப்பிரச்சினை இந்த நாட்டின் மிக நீண்டகாலப் பிரச்சினை. மிகமிகச் சிக்கலானதும் ஆகும். அதனைத் தீர்ப்பது என்பது இலகுவான விடயமல்ல — இவை உண்மையானவையே.

இத்தகைய ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்திடம் தெளிவான சிந்தனை வேண்டும். சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்களின் சுதந்திரத்தையும், உரிமைகளையும் வழங்கக் கூடிய ஒரு தீர்வைக்கொண்டு வர வேண்டும் என்ற மனத் தெளிவு வேண்டும். வெறும் "சில்லறைகளைப்" போட்டு அவர்களைத் திருப்திப்படுத்திக் கொண்டு, சிங்களவர்களைச் சந்தோஷப்படுத்தும் தீர்வைக் கொண்டு வரலாம் என்ற மன மயக்கம் இருக்கக் கூடாது.

வெறும் அரசியல்வாதி என்ற நிலையில் நின்று கொண்டு — மீண்டும் பதவிக்கு வருவதற்கு வாக்குத் தளம் அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு — செயற்பட முனைந்தால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது கடினம்; இயலாத காரியமாகவே முடியும்.

இது வரை காலமும் சிங்களத் தலைவர்கள் அரசியல் வாதிகளாக நின்று கொண்டு இனப்பிரச்சினை விவகாரத்தைக் கையாண்டதாலேயே நிலைமை இந்தளவுக்கு மோசமடைந்திருக்கிறது.

எனவே, இனப்பிரச்சினைக்கு நீதியான, கௌரவமான தீர்வு காண வேண்டும் என்ற விருப்பமும், அக்கறையும் சந்திரிகாவுக்கு உண்மையாகவே இருக்குமானால், அவர் வெறும் அரசியல்வாதியாக அன்றி தேசபக்தி நிறைந்த அரசியல் ஞானியாக (Statesman) நின்று செயல் புரிவது அவசியம்.

அப்போதுதான் குறுகிய கட்சி, இன வட்டங்களில் இருந்து விடுபட்டு இன விவகாரத்தைப் பரந்த நோக்குடன் பார்க்க முடியும். தமிழர்களுக்கு உரிய உரிமைகளை வழங்கப்போய் சிங்களவர்களின் துரோகி ஆகிவிடுவேனோ என்று அஞ்சி தனது செயற்பாடுகளில் தடுமாறும் நிலையும் வராது. நீதியான தீர்வைக் காண்பதில் உள்ள தடைகளையும், இடையூறுகளையும் இலகுவில் தாண்டி விடக் கூடிய சக்தியும் பிறக்கும்.

இனப்பிரச்சினையை நீதியாகத் தீர்க்கவும், அதற்கான நேர்மை உதிக்கவும், சந்திரிகா தம்மை அரசியல் ஞானியாக மாற்றிக் கொள்வது அவசியம். மாறுவாரா?

# வளங்களை பயன்படுத்த வசதியாக கூடுதல் மாணவரை அனுமதிக்குக!

## யாழ். பல்கலை கழகக் துணைவேந்தர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள வளங்களைப் பூரணமாகப் பயன்படுத்தத் தக்க வகையில் கூடுதல் மாணவர்களை அனுமதிக்க வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் கே குணரத்தினம் கல்வி உயர் கல்வி அமைச்சரிடம் கேட்டுள்ளார்.

துணை வேந்தர் பல்கலைக் கழக பதிவாளர் மூலமாக உயர் கல்வி அமைச்சருக்கு கடந்த வாரம் அனுப்பிய கடிதத்திலேயே மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

கடந்த இருவருடங்களிலும் யாழ். பல்கலைக்கழகத்துக்கு குறைவான மாணவர்கள் அனுமதிக்கப்பட்டதால் பல்கலைக்கழகத்தில் உள்ள வளங்கள் முழுமையாக பயன்படுத்தப்படவில்லை என்றும் —

கடந்த பரீட்சையில் யாழ். மாணவர்கள் திறமையான முடிவுகளைப் பெற்றுள்ளதால் அவர்களுக்கு கல்வி வசதி கிடைக்க சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்றும் — துணை வேந்தர் தமது கடிதத்தில் கேட்டுள்ளார்.

93 ஆம் ஆண்டு நடந்த ஜி. சி. ஈ. (உயர்தர)பரீட்சையில் இருந்து மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும் பணிகள் தற்சமயம் நடைபெறுவதால், யாழ். மாணவர்கள் குறித்து கடந்த வருடங்களில் கடைப்பிடித்த நடைமுறையை மாற்றி கூடுதல் மாணவர்களை அனுமதிக்குமாறும் துணை வேந்தர் கேட்டுள்ளார். (ஐ-3)

பங்களாதேஷ்

## போராட்டத்தை தொடர எதிர்க்கட்சியின் முடிவு

புதுடில்லி, ஜன. 26

பங்களாதேஷில் பிரதமர் பேகம் காலிதாஷியாவின் அரசைக்கவிழ்க்கும் இயக்கத்தை தொடர்வது என்று முக்கிய எதிர்க்கட்சிகள் உறுதி பூண்டுள்ளன.

நேற்று முன்தினம் டாக்காவில் 6 மணிநேர வேலை நிறுத்தம் நடைபெற்றது. அதன் பின்னர் ஒரு பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவி ஷேக் ஹசீனா அவாமி லீக்கின்தலைவர்களும், தொண்டர்களும் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தார்.

6 மணிநேர வேலை நிறுத்தத்தினால் பங்களாதேஷில் இயல்பு வாழ்க்கை நிலை பாதிக்கப்பட்டது.

சிறு சிறு கலகங்களினால் 50 பேர் காயமடைந்தனர். (இ)

## நேர கணிப்பாளர் செய்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் நடத்தும் நேரங்கணிப்பாளர்களுக்கான செய்முறைப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை காலை 9-00 மணி முதல் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

ஏற்கனவே நடைபெற்ற- நேரங்கணிப்பாளர்களுக்கான- எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்தோர் இந்த செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றும்படி அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## கிராமியப் பாசறை

யாழ்ப்பாணம், ஜன. 26

நாவற்குழி தெற்கு மறவன்புலோ கிராமியப் பாசறை மாதாந்த நிகழ்ச்சி இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு விஷ்ணு வித்தியாலயத்தில் நடைபெறும். (க)

## கணிதபாடம் சித்திபெறாத 5 ஆயிரம் ஆசிரியர்கள்

### சேவையாற்றுவது கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜன. 26

தற்போது நாட்டில் பணியாற்றும் சுமார் 2 லட்சம் ஆசிரியர்களில் சுமார் 5 ஆயிரம் பேர் ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியடையாதவர்கள் என்பது தெரிய வந்துள்ளது.

இவர்களில் பலர் 1978 ஆம் ஆண்டில் ஆங்கில, சங்கீத, நடன ஆசிரியர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் என்றும்—

இன்னும் சிலர் தற்போது பயிற்சி பெற்றுவரும் ஆசிரியர்கள் என்றும் அகில இலங்கை ஐக்கிய ஆசிரிய சங்கத்தின் தலைவரான யல்லேவெல பஞ்ஞசேகர தேரர் தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் பயிற்சி பெற்றுவரும் ஆசிரியர்களில் 8 பேர் கணித பாடத்தில் சித்தியடைந்திராதது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் பதவிக்கு தேவையான அடிப்படைத் தகுதிகளைக் கொண்டிராதவர்களை சேவையிலிருந்து உடனடியாக நீக்குமாறு கல்விச் சேவைச் சபை பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுக்கு பணிப்புரைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சில் அண்மையில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## 'சேலைன்' ஊசி ஏற்ற 5,000 பேரை திரட்ட முடிவு

கொழும்பு, ஜன. 26

நோயாளிகளுக்கு ஊசி ஏற்றுதல் "சேலைன்" ஏற்றுதல் போன்ற வேலைகளுக்கு ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற 5,000 பேரைச் சேர்த்துக் கொள்ள சுகாதார, பெருந்தெருக்கள், சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுவோருக்கு குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்படும்.

ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் தாதிகள், தாம் பயிற்சி பெற்ற கடமைகளில் மட்டும் ஈடுபடுவது என்ற போராட்டத்தை இன்னும் ஓரிரு தினங்களில் நிறுத்தாவிடில் அடுத்தமாதமளவில் புதிய நியமனங்கள் செய்யப்படும் என்று சுகாதார, பெருந்தெருக்கள், சமூகசேவைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி தெரிவித்தார். (இ)

## கந்தரோடைப் பகுதியில் நால்வருக்கு மலேரியா!

வலிகாமம் தெற்கு, ஜன. 26

வலிகாமம் தெற்கு - கந்தரோடை பிரிவில் நான்கு பேருக்கு மலேரியா நோய் ஏற்பட்டிருப்பதாக வைத்திய பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இதனை அடுத்து மலேரியாவினால் பீடிக்கப்பட்டவர்கள் வசிக்கும் சுற்றாடலில் உள்ள மக்கள் அனைவரும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சுகாதாரப் பகுதியினர் அப்பகுதிக்குச் சென்று இரத்தப் பரிசோதனைகளையும் சுகாதார ஆய்வுகளையும் மேற்கொண்டனர்.

மலேரியாக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்கு வைத்திய சிகிச்சை அளிக்கப்பட்டதுடன் வீடுகளுக்கு மலத்தியோன் பவுடரும் தெளிக்கப்பட்டது.

## பயணிகளால் தாக்குண்டு பஸ் நடத்துநர் மரணம்

### ஜா - எல பகுதியில் சம்பவம்

கொழும்பு, ஜன. 26

பஸ் பயணிகள் குழு ஒன்றினால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பஸ் நடத்துனர் ஒருவர் பின்னர் அங்கு உயிரிழந்தார்.

ஜா—எல எக்கல பகுதியில் கடந்த சனி இரவு இச்சம்பவம் நடைபெற்றது.

இச் சம்பவம் குறித்து விசாரணை நடத்திய பொலிஸார் மூவரைக் கைது செய்துள்ளனர்.

உயிரிழந்த பஸ் நடத்துனர் பயணிகளை மரியாதைக் குறைவாக ஏசியும், பஸ் கட்டணத்தை கண்டபடி அறவிட்டும் வந்தவர் என்றும்—

அதனால் ஆத்திரமடைந்த பஸ் பயணிகள் சிலர் ஒன்று சேர்ந்து அவரைத் தாக்கினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## ஜப்பானிய பூகம்பம் கடவுளின் பழிவாங்கல்!

### கேணல் கடாபி அறிவிப்பு

டியூனிஸ், ஜன. 26

மத்திய ஜப்பானில் கடந்த வாரம் இடம்பெற்ற பெரும் பூமி அதிர்ச்சியில் 5 ஆயிரம் மக்கள் பலியாகியிருப்பது குறித்தும், கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்கள் நிர்மூலமாகியிருப்பதையிட்டும் உலக நாடுகள் பலவும் அதிர்ச்சியும், அனுதாபமும் தெரிவித்துள்ள இவ் வேளையில்—

லிபியத் தலைவர் கேணல் கடாபி "ஜப்பானிய பூமி அதிர்ச்சி கடவுளின் பழிவாங்கல்" என்று வர்ணித்துள்ளார்.

ஜப்பான் தனது பொருளாதாரத்தை சாத்தானுக்கு சேவை செய்யப் பயன்படுத்துவதே கடவுளின் பழி வாங்கலுக்கு காரணம் என்றும் கடாபி "நியாயம்" கற்பித்துள்ளார்.

பூமி அதிர்ச்சி அனர்த்தத்தினால் பெரும் அவலங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிற அப்பாவி ஜப்பானியர்களின் நிலைமை குறித்து நாம் கவலை கொள்கின்ற போதிலும் இப் பூமி அதிர்ச்சியானது அப்பட்டமாகவே கடவுளின் ஒரு வஞ்சம் தீர்ப்பு என்றே சொல்லவேண்டியுள்ளது— என்று கேணல் கடாபி தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

லிபியாவின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான "ஜனா" கடந்த ஞாயிறன்று இதனை அறிவித்தது.

"ஜப்பானில் இவ்வாறு நடக்கும் என்று நாம் எதிர்பார்த்தோம். ஜப்பானுக்கு இவ்வாறு செய்யுமாறு நாம் ஆண்டவரைப் பிரார்த்தித்து வேண்டிக் கொண்டோம். சாத்தானான அமெரிக்காவுக்கு சேவை செய்ய ஜப்பான் எப்போதுமே முண்டியடித்துக் கொண்டு ஓடுகிறது அமெரிக்காவின் பின்னால் தொங்கிக் கொண்டிருக்கும் எவருக்குமே உதவி செய்ய ஜப்பான் தயங்குவதில்லை."

— இவ்வாறு கேணல் கடாபி தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

மத்திய ஜப்பானில் இடம்பெற்ற பூமி அதிர்ச்சியில் 4 ஆயிரத்து 984 பேர் கொல்லப்பட்டனர். 25 ஆயிரத்து 940 பேர் காயமடைந்துள்ளனர். 3 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வீடு வாசல்களை இழந்து நிர்க்கதியாகியுள்ளனர். (ஐ)

## வாழைச்சேனை சந்தியில் போக்குவரத்துக்கு தடை!

கொழும்பு, ஜன. 26

வாழைச்சேனை நகரில் பிரதான சந்தியிலுள்ள பொலீஸ் காவல் நிலையத்தின் முன்பாக பிரதான வீதி ஊடாக போக்குவரத்து செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரதான வீதி பொலீஸாரினால் மூடப்பட்டுள்ளதால் வாகனங்கள் யாவும் கறுவாக்கேணி உள்வீதி ஊடாகவே செல்கின்றன. பொலீஸ் காவல் நிலையத்தின் முன்பான வீதியில் பாதசாரிகள் செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இதனால் பெற்றோல்நிலையத்திற்கு எரிபொருள் நிரப்பச் செல்வதில் வாகனச் சொந்தக்காரர்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். "சென்றியில்" கடமையிலிருக்கும் பொலீஸாரின் அனுமதி பெற்று உள்ளே சென்று ஒரு குறிப்பிட்டளவு பெற்றோலை மட்டுமே பெற்றுச் செல்ல வேண்டியுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் பொலீஸார் திடீரென்று இவ் வீதியை போக்குவரத்து செய்ய முடியாமல் மூடியுள்ளனர். [ஐ]

## கனகராசா பற்றிய சரிதம் எழுதப்பட வேண்டும்

### விருது வழங்கும் வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜன. 26

கலாநிதி கனகராசா பற்றிய சரிதம் எழுதப்பட வேண்டும். அவரின் சரிதம் அவர் வாழும் காலத்திலேயே வெளிவரவேண்டும்.

மாற்றம் சஞ்சிகை நடத்திய தமிழ்த் தாய் மன்றத்தின் தேசாபிமானி விருது வழங்கும் வைபவத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 2 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவில் பேராசிரியர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது.

கலாநிதி கனகராசா சுற்றுப்புற சூழல் பாதுகாப்புக்காக மரம் நடுகையை பல வருடங்களாக ஊக்குவித்தவர். பொருளாதாரம், பசுவளர்ப்பு, பொதுஜனக் கல்வி, ஆரோக்கிய வாழ்வு, ஊனமுற்றோர் சேவை போன்றவற்றை செயலில் செய்து காட்டியவர் என்றார்.

தேசாபிமானி விருதை பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் கலாநிதி கனகராசாவுக்கு வழங்கி கௌரவித்தார். பேரரசி வண்ணச்சோலை உரிமையாளர் திரு. சோமசுந்தரம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். தொடர்ந்து ஏனைய அன்பர்கள் ஆதரவாளர்கள் திரு கனகராசாவைபொன்னாடை போர்த்தி, மாலையிட்டு, வாழ்த்துப்பா வழங்கிக் கௌரவித்தார்கள்.

இந்நிகழ்வில் வெளியிடப்பட்ட மாற்றம் சஞ்சிகையின் 2 ஆம் ஆண்டு இதழின் முதற் பிரதியை உதயன் பத்திரிகை நிறுவன நிர்வாக இயக்குநர் திரு ஈ. சரவணபவன் பெற்றுக் கொண்டார். மாற்றம் சஞ்சிகையின் ஆசிரியர் திரு யாதுமூரான் மற்றும் திரு சொக்கலிங்கம் (சொக்கன்) திரு. செம்பியன் செல்வன், திரு. சிவ ஆறுமுகசாமி திரு உருமையூர் முரளி, திரு மல்லிகை மைந்தன் ஆகியோரும் விழாவில் உரையாற்றினர் (க 4)

# சோதனை என்ற பெயரில் பெண்களை மானபங்கப்படுத்திய சிப்பாய்கள்

## தம்பனாவெளிச் சம்பவம் குறித்து மேலும் தகவல்கள்

கடந்த ஜனவரி முதலாம் திகதி மட்டக்களப்பு தம்பனாவெளி பிரதேசத்தில் ராணுவத்தினர் மேற்கொண்ட அடாவடித்தனங்களை மூடி மறைக்கும் முயற்சிகள் ராணுவத் தரப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தம்பனா வெளிச் சம்பவத்தின் போது பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டனர். வீடுகள், வயல்கள் நாசமாக்கப்பட்டன. பலர் தாக்கப்பட்டனர்.

சென்ற வருடம் டிசம்பர் மாதம் 29 ஆம் திகதிதம்பனாவெளி ராணுவ முகாம் தாக்கப்பட்டதற்கு பழிக்குப் பழி வாங்கு முகமாகவே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

### தொடரும் பழிவாங்கும் சம்பவங்கள்

கொப்பேகடுவ கொலைக்கு ஒரு மைலந்தனை — அனுராதபுரம் சம்பவத்துக்கு ஒரு நற்பிட்டிமுனை — என்பது போல தொடர்ச்சியாக பழிக்குப் பழி வாங்கும் சம்பவங்கள் நடந்து வந்துள்ளன.

ஆனால் ஒவ்வொரு முறையும் இராணுவத்தரப்பில் பழிவாங்கும் நடவடிக்கைகள் யாவும் பொது மக்கள் மீதே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அந்த வரிசையில் தம்பனாவெளிசம்பவமும் அடங்குகிறது.

### பெண்ணை இழுத்துச் சென்றனர்

தம்பனாவெளி பிரதேசத்தில் காயனடி எனும் பகுதியில் 19 வயது இளம் பெண்ணொருவர் வயதான தந்தையுடன் செங்கலடிக்கு சென்று கொண்டிருந்தார்.

அந்தப் பகுதிக்குள் பிரவேசிக்க இராணுவத்தினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர். அசையாமல் நின்ற இளம் பெண்ணை சோதனை செய்ய வேண்டும் என இழுத்துச் சென்ற இராணுவத்தினர் அப் பெண்ணை பலாத்காரம் செய்தனர்.

தகப்பன் கதறிய போது தாக்குதலுக்கு உள்ளானார். இளம் பெண்ணை மீண்டும் தகப்பனிடம் ஒப்படைத்த போது அப்பெண்ணிடமிருந்து கிரனைட் ஒன்றை கண்டெடுத்ததாகவும் [illegible]

தங்களைப்பற்றி மூச்சுவிட்டால் நடவடிக்கை எடுப்பதாகவும் மிரட்டி அனுப்பினார்கள். மேலும்இராணுவத்தினர் அப்பகுதியில் வாவிகளை இக்கிரையாக்கினர்.

அப்பகுதியிலுள்ள பல குடும்பங்களை அடித்துத் துன்பப் படுத்தினர்.

ஒரு இடத்தில் நிற்க வைத்து ஆண்களை மிகவும் பயங்கரமான முறையில் துப்பாக்கிகளால் தாக்கினார்கள். பலர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

அவர்களில் 68 வயதுடைய ஒரு வயோதிபரும், 62 வயதுடைய ஒரு வயோதிபரும் மோசமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

பெண்களை தனியாக அழைத்துச் சென்றார்.

கிரனைட் இருக்கிறதா என சோதனை செய்வதாக கூறி ஆடைகளை களையச் செய்தனர்.

[illegible] பெண்களை பலமாக தாக்கி[illegible]வேல்.

இராணுவத்தினரே பலாத்காரமாக ஆடைகளை களைந்துஇம்சைப்படுத்தினர். சோதனை செய்வதாகக் கூறி சேட்டைகள் செய்த தங்களை இம்சைப்படுத்தியதாக சில பெண்கள் தெரிவித்தனர்.

தம்பனாவெளி பகுதியை சூழ்ந்துள்ள பூமாச்சோலை, காயன்காடு, சின்ன கதிர்காமம் போன்ற இடங்களிலும் இத்தகைய சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன. மொத்தம் 3 பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டனர்.

### வாக்குமூலமளிக்க பயந்தனர்

3ஆம் திகதி செஞ்சிலுவை சங்க அதிகாரிகள் முன்னிலையில் மேற்படி பெண்கள் உட்பட பலர் வாக்கு மூலமளித்தனர்.

ஆனால் 4ஆம் திகதி இது பற்றி விசாரித்து குறிப்பிட்ட ராணுவத்தினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்போவதாக கூறி வாக்கு மூலம் எடுக்க வந்த இராணுவ இணைப் திகாரியிடம் மேற்படி பெண்கள் பயத்தின் காரணமாக வாக்கு மூலமளிக்க முன் வரவில்லை.

அப்படி எதுவும் நடக்கவில்லை என கூறி விட்டனர்.

அப்பெண்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிப்பதாகவும் வாக்கு மூலமளித்து ஒத்துழைக்கும் படியும் வற்புறுத்திய பின்னர் ஒரு பெண் மட்டும வாக்கு மூலமளிக்க முன் வந்தார்.

அப்பெண்ணின் வாக்கு மூலத்தைத் தொடர்ந்து உடனடியாக தம்பனாவெளி இராணுவ முகாமில் அடையாள அணிவகுப்பொன்றை நடத்திய இணைப்பதிகாரி அப்பெண்ணை அடையாளம் காட்டக் கோரவே அப்பெண் அணி வகுப்பில முதலாவது நின்ற நபரையும் மூன்றாவதாக நின்ற நபரையும் அடையாளம் காட்டினார்.

### குற்றத்தை ஒப்புக்கொண்ட இருவர்

பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டதாக அடையாளம் காட்டப்பட்ட இருவரையும் விசாரணை செய்த அதிகாரிகள் சம்பந்தப்பட்ட இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதாக கூறியுள்ளார்.

இருந்த போதும் இறுதியாக கிடைத்த தகவல்களின்படி சம்பந்தப்பட்ட பெண்ணின் உடன்பாட்டுடனேயே நடந்து கொண்டதாக கூறி இதனை குற்றமிழைப்பு இல்லை என திருப்பதற்கான முயற்சிகள் இராணுவத்தரப்பில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் வெளிவருகின்றன.

நன்றி சரிநிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசேஸ்வரி இராசரத்தினம்

சுழிபுரம் திருவாளர், திருமதி சுப்பையா உடையாரின் மகன் இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், திருமதி ஜமுனா செல்வக்குமார், செல்வி ராதிகா இராசரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. சரவணபவன் செல்வக்குமாரின் அன்பு மாமியாரும், சசிகா, ஹரேந்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாகிய திருமதி இராசேஸ்வரி இராசரத்தினம் காலமார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26 1-95) வியாழக்கிழமை காலை 9-00 மணியளவில் அவரின் சித்தன்கேணி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. இராசரத்தினம்,
[கணவர்]

சிவன் கோயில் வீதி,
சித்தன்கேணி. [34861]

## திருமதி வேலுப்பிள்ளை இராசம்மா

சோவில் வீதி, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி வேலுப்பிள்ளை இராசம்மா 25-1-95 நேற்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஓவசியர் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பையா தம்பதிகளின் மூத்தமகளும், திருமதி ந. பூரணம், திரு. க. அழகரட்ணம், திரு. சு. தியாகராசா, திருமதி நாகேஸ்வரி, திருமதி பரமேஸ்வரி, திருமதி இராஜேஸ்வரி, திரு ஜெயவீரசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி அன்னம் நடராஜா, காலஞ்சென்ற திருமதி தங்கேஸ்வரி முத்தையா மற்றும் திரு வேலுப்பிள்ளை பரராஜசிங்கம், திருமதிகள் தங்கமணி கந்தப்பிள்ளை, விமலாதேவி நமசிவாயம் (வடபிராந்திய போக்குவரத்துச்சபை கோண்டாவில்), வசந்தாதேவி சிவபாலன் (போக்குவரச்துச்சபை, ஹற்றன்), சுசிலாதேவி பாலசுப்பிரமணியஐயர் (ஜேர்மனி), அவர்களின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திரு. V. M. நடராஜா, திரு. T. முத்தையா, திருமதி V. தடாதகைப்பிராட்டியார், திரு. S. N கந்தப்பிள்ளை, திரு. S. நமசிவாயம் (J P.), திரு S சிவபாலன், திரு. T. பாலசுப்பிரமணிய ஐயர் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவகுமார், சாந்தகுமாரி, ஜெயகுமார், பிறேமகுமாரி, உதயகுமாரி, தேவகுமாரி, சாம்பவி, யசோதா, பத்மினி, விஜயசிறி, ரஞ்சனி, ரமேஸ், சுரேஸ், தயானி ரணேஸ், சுகந்தினி, சுபாசினி, Dr. மணிமேகலா, அகிலா, ஆதித்தன், மணிவண்ணன், அருணா, காலம்சென்ற அருட்செல்வன், கணேசன், செந்தில்குமார், அனுஷா, பிரதாபன், திவாகரன், அஜித்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வித்தியா, ஆர்திகா, மயூரன், ஜனனி, ஜீவனி, சிந்துஜா, நிரோசன், சந்தியா, லாவண்யா, சௌமியா, அனோஜ்ஹரித்திரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சாரதா மகளிர் கல்லூரி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் உள்ள இல்லத்தில் [26-1-95] இன்று காலை 10-00 மணிக்கு நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. பரராஜசிங்கம்,
[மகன்]

கொக்குவில். [34855]

## இராமலிங்கம் கைலைலிங்கம்

"சிவஸ்தான்" ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இ. கைலைலிங்கம் (B. Sc. Agr Poona) முன்னாள் விவசாய திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் (DOAS) அவர்கள் 25-01-1995 புதன் காலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், முருகதாஸ், கல்பனா, கணேஷதாஸ் (நோர்வே), ஜஸ்மின், ஜயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், அல்வாயைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. இராமலிங்கம் (I.E), வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகனும், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற இராசரத்தினம், தங்கம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற இ நடேசலிங்கம் (I E.), இ. சண்முகலிங்கம் (DOAS), Dr சோமலிங்கம் (லண்டன்), திருமதி விஜயரத்தினம் நாகபூஷணம் (அல்வாய்), காலஞ்சென்ற திருமதி நமசிவாயம் பாக்கியபூஷணம், திருமதி விவேகானந்தன் அன்னபூஷணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-01-95) வியாழன் காலை 11-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கரையாம்பிட்டி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
முருகதாஸ் (மகன்)

"சிவஸ்தான்",
ஆனைக்கோட்டை. [34862]

## பேதுருப்பிள்ளை ஆசீர்வாதம்

பத்தாவத்தையை பிறப்பிடமாகவும், 14/2, கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய தலைமை ஆசிரியர் பேதுருப்பிள்ளை ஆசீர்வாதம் 21-1-95 அன்று கொழும்பில் காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 22-1-95 கொழும்பில் நடைபெற்றன.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 27-1-95 வெள்ளிக்கிழமை புனித யுவானியார் ஆலயத்தில் காலை 6 மணிக்கு திருப்பலி நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
கிறிஸ்ரா வேதநாயகம்.

[34852]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26-01-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஈழ அறிஞர்களை நாடு கடத்தியமை மிக மோசமான அடாவடித்தனம்

## "புரொன்ற் லைன்" கண்டனம்

சென்னை, ஜன. 26

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க அழைக்கப்பட்ட இலங்கை, சுவீடன் கல்விமான்களை நாடு கடத்தியமை அறிவாளிகளுக்கு எதிரான செயல் மாத்திரம் அல்ல, பாதுகாப்பு என்ற பெயரில் செய்யப்பட்ட மிக மோசமான அடாவடித்தனமும் ஆகும்.

சென்னையிலிருந்து வெளியாகும் "புறொன்ற் லைன்" சஞ்சிகை அதன் ஜனவரி 27 ஆம் திகதிய இதழில் வெளியிட்ட சிறப்புக் கட்டுரை ஒன்றில் இவ்வாறு கண்டித்துள்ளது.

கட்டுரையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

இந்த புகழ்மிக்க கல்விமான்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் ஏன் இவ்வளவு சடுதியாக நாடு கடத்தப்பட்டார்கள் என்பது பற்றித் தமிழ்நாடு அரசாங்கம் விளக்கம் கொடுக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இருதயபூமியான யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு சிலர் மாநாட்டுக்கு வந்திருந்தமை வெளிப்படையான காரணமாக இருக்கலாம். இந்த இயக்கம் ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பின்னர் இந்தியாவில் தடை செய்யப்பட்டது தெரிந்ததே.

ஆயின் ஈ. பி. ஆர். எல். எவ். விடமிருந்து அவர்களுக்கு ஆபத்து உண்டு என்று பொலிசார் இந்தக் கல்விமான்கள் சிலரிடம் கூறியிருந்தனர்.

இந்தக் கல்விமான்கள் தாங்களாக இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை; ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பிக்க சர்வதேச தமிழ் ஆராய்ச்சி சங்கத்தின் அழைப்பின் பேரிலேயே கலந்து கொள்ள வந்திருந்தார்கள். அவர்களுடைய கட்டுரைகளின் பொழிப்புகள் பிரதிநிதிகள் மத்தியில் விநியோகிக்கப்பட்டன.

1994 டிசெம்பரில் இலங்கைக் கல்விமான்களும் மாநாட்டுக்கு அழைக்கப்பட வேண்டும் என்று கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின்போது, அவர்களை அழைப்பது சர்வதேச தமிழ் ஆராய்ச்சி சங்கத்தின் உரிமைக்குட்பட்ட விஷயம் என்று தமிழ்நாடு அரசாங்கம் கூறியது.

பின்னர் ஏன் இந்த நாடு கடத்தல்?

—இவ்வாறு 'புறொன்ற் லைன்' கட்டுரையில் கேட்கப்பட்டுள்ளது. (அ-க)

## பூகம்பத்தில் 5,600 பேர் பலி

டோக்கியோ, ஜன. 26

மத்திய ஜப்பானின் கோபே நகரத்தில் அண்மையில் நடைபெற்ற பூமி அதிர்ச்சியில் 5 ஆயிரத்து 600 பேருக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-க)

## காலிதாஸியா சந்திரிகாவுடன் பேச்சு

கொழும்பு, ஜன. 26

பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதாஸியா இரண்டு நாள் இலங்கை விஜயம் மேற்கொண்டு நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார்.

ஜனாதிபதிசந்திரிகா நேற்று ஜனாதிபதி செயலகத்தில் அவருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஜனாதிபதி சந்திரிகாவை அடுத்த சார்க் மாநாட்டுக்கு அழைப்பதே பிரதமர் பேகம் காலிதா ஸியாவின் இலங்கை விஜயத்தின் பிரதான நோக்கம் ஆகும் என அறிவிக்கப்படுகிறது. (ஒ-க)

### சமாதான பேச்சு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முகாமை அகற்றுவதில்லை என்ற முடிவை அரசு இன்னும் மாற்றிக்கொள்ளவில்லை என்றும் —

அதற்கு இராணுவம் இணக்கம் தெரிவிக்க மறுத்துள்ளதாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது. (அ-3-6(

### கிராம...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

புதிய திட்டத்தின் கீழ் கிராம உத்தியோகத்தர்கள் மூன்று தரங்களாக பிரிக்கப்படுவர் என்றும் பிரதேச செயலாளர் வரை அவர்கள் பதவி உயர்வு பெற வாய்ப்பு உண்டு என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஒ-க)

### சமாதனத்தை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நம்புகிறேன் —

இனநெருக்கடியை முடிவுக்கு கொண்டு வருவதற்கு விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் நடத்திவரும் சமாதானப் பேச்சுவார்த்தை உட்பட நாம் மேற்கொள்ளும் சகல முயற்சிகளும் வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

சமாதானம் மீது வடபகுதி மக்கள் கொண்டிருக்கும் ஆழமான அவா விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்குக் கொண்டு வந்துள்ளது— என்றார்.

இனநெருக்கடிக்கு ஜனநாயக நீதியான தீர்வு ஒன்றைக் காண்பதற்கான சந்திரிகாவின் முயற்சிக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே முரண்பாடு இல்லையா? — என்று செய்தியாளர் அவரிடம் கேட்டார். அதற்கு அவர் பின்வருமாறு பதிலளித்தார்:-

அவசியம் ஏற்படும் போது சகல இயக்கங்களுமே அவற்றின் நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்ளத்தான் வேண்டும். பலஸ்தீன இயக்கம் போன்ற கெரில்லா அமைப்பு இஸ்ரேலுடன் பேச்சு நடத்தியது போன்று விடுதலைப் புலிகள் இயக்கமும் அரசுடன் ஒரே மேசையில் இருந்து பேச்சுவார்த்தை நடத்துவது சாத்தியம்— என்றார். (அ-3)

மலிவு விலையில்
(15/-)
ஆண்டு மலர்
(34868)

## அலரி மாளிகையில்

# வாகனம் சோதனையிட நவீன நுட்ப சாதனங்கள்!

கொழும்பு, ஜன. 26

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் வாசஸ்தலமான அலரிமாளிகைக்குச் செல்லும் வாகனங்களை சோதனையிடுவதற்கு அங்கு நுட்பமான நவீன சாதனங்கள் பொருத்தப்பட இருப்பதாக ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அலரிமாளிகையில் குண்டுக்குரிய இரசாயண பொருள்கள் கண்டுபிடிக்கப் பட்டதை அடுத்து அங்கு மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஓர் அம்சமாகவே இந்த நவீன சாதனங்கள் பொருத்தப்பட விருக்கின்றன.

அலரிமாளிகைக்குள் செல்லும் அமைச்சர்கள் மற்றும் முப்படைத்தளபதிகள், பொலீஸ் மா அதிபர்கள் ஆகியோர் தமது வாகனங்களை பாதுகாப்புப் பிரிவு ஏற்பாடு செய்துள்ள இடத்தில் விட்டு, பாதுகாப்புப் பிரிவினரின் வாகனத்திலேயே செல்ல வேண்டும் எனப்பணிக்கப் பட்டுள்ளனர்.

அலரிமாளிகைக்குள் வாகனங்கள் செல்வது தடை செய்யப்பட்டுள்ள ஏற்பாடு தற்காலிகமானது என்றும் —

வாகனங்களை சோதனையிடும் சாதனங்கள் பொருத்தப்பட்டதும் அத்தடை நீக்கப்படும் என்றும் — பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதிபாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையின் ஆலோசனைப்படியே புதிய நடைமுறை அமுல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

# புதிய அரசமைப்பு நகல்: முடிவுகூற ஐ.தே.க. மறுப்பு

புதிய அரசமைப்பு திருத்த நகல் குறித்து உடன் பதில் கூற ஐ தே.க மறுத்துள்ளதாகவும் கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நகல் திட்டத்தில் உள்ள சாதக, பாதக நிலை குறித்து நன்றாகப் பரிசீலித்த பின்பே அது பற்றிய முடிவை வெளியிடுவோம் என்று ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ஒ-3-3)

# நாடாளுமன்றில் ஓரணியில் திரளும் தமிழ் எம்.பிக்கள்!

கொழும்பு, ஜன. 26

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் எம்.பிக்கள் அனைவரும் இனப்பிரச்சினை தொடர்பாக ஏகோபித்த குரலை எழுப்பும் நோக்கில், ஒரே அணியில் செயற்படுவது என்று தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதன் முதல் நடவடிக்கையாக இம்மாத இறுதியில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் கூடி பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள இருப்பதாகவும் தெரியவருகிறது. (ஒ-10)

## யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், ஜன. 26

லண்டன் ஹரிசியன் முன்னாள் மேயர் சின்னமணி நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

விமான மூலம் பலாலி வந்த அவர் கப்பல் மூலம் பருத்தித் துறைக்கு வந்து சேர்ந்தார். (ஒ-3-173)

# உள்ளூராட்சி ஒய்வூதிய சட்டம் திருத்த மகஜர்

"உள்ளூராட்சி விதவை, அனாதை ஒய்வூதியச் சட்டத்தைத் திருத்துவதற்காக அமைச்சரவை மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. திருத்தங்கள் அங்கீகரிக்கப்பட்டதும் உள்ளூராட்சி ஒய்வூதியர்களிடமிருந்து பணம் கழிப்பதை நிறுத்துவது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும்."

ஒய்வூதியப் பணிப்பாளர் திரு. ஆர். டபிள்யு. பியசேன பொது நிர்வாக, உள்ளூராட்சி, பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச்சுக்கு உள்ளூராட்சி ஒய்வூதியர்களிடம் விதவை, அனாதை ஒய்வூதிய நிதிக்கு அவர்கள் ஒய்வு பெற்ற பின்னரும் பணம் கழிப்பதை ஒட்டிய விவகாரத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடமாநில ஒய்வூதியகள் சங்கங்களின் சம்மேளனம் இவ்வாறு பணம் கழிப்பதை ஆட்சேபித்து மகஜர் ஒன்றை அனுப்பியிருந்தது [க]

### தமிழ் அகதி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விருப்பதாகவும் —

திருப்பி அனுப்பும் முடிவை [illegible] — செய்தி ஏஜென்ஸி மேலும் தெரிவித்தது. (அ-2)

## உதவிப் பணம்

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள மாதாந்த உதவிப் பணம் பெறுவோர்க்கான ஜனவரி மாத கொடுப்பனவு அந்தந்தப் பிரிவு தபால் நிலையங்களில் வழங்கப்பட்டு வருகிறது. (ஒ-117)

## கூட்டம்

சங்கானை கல்விக் கோட்டத்தை சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் சித்தன்கேணி கணேச வித்தியாலய மண்டபத்தில்கோட்டப் பிரதி கல்விப் பணிப்பாளர் திரு.ப. விக்னேஸ்வரன் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறும். (ஒ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைவஸ்து கடத்தல்:

# 7 இலங்கைத் தமிழர் மீது ஹொலண்டில் வழக்கு!

1983 ஆம் ஆண்டு முதல் ஹொலண்டில் இடம்பெற்று வருவதாகக் கூறப்படும் போதைவஸ்து கடத்தல் மற்றும் ஆட்கடத்தல் தொடர்பாக இலங்கைத் தமிழர்களைக் கொண்ட குழு ஒன்றின் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு இம்மாதம் விசாரணைக்கு எடுக்கப்படவிருக்கிறது.

ஏழுபேர் கொண்ட இந்தக் குழுவினர் போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்டதுடன், இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து தமிழர்களை அழைத்துவந்து ஹொலண்டில் அரசியல் தஞ்சம் பெற வைத்தனர் என்றும்—

இதுவரை இக்குழுவினர் ஆயிரத்து 200 பேருக்கு அரசியல் தஞ்சம் பெற உதவினர் என்றும் — பொலீஸ் அதிபர் பி. மெல்சன் தெரிவித்துள்ளார்.

இவர்களில் ஐவர் சிறை வைக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய இருவரும் பிணையில் நிற்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

யாழ். மாவட்ட வங்கியாளர் சங்கம்

## இடைநிலை வங்கியாளர் பரீட்சைக்கான

பயிற்சி வகுப்புக்கள் பற்றிய

## அறிவித்தல்

ஆரம்பம்: 28-01-1995 சனிக்கிழமை
காலை 8.30 மணி

இடம்: யாழ்ப்பாணக்கல்லூரி, பட்டதாரிப்பிரிவு
(இலங்கை வர்த்தக வங்கிக்கு அருகில்)

பங்குபற்ற விரும்புபவர்கள், தங்கள் வங்கி முகாமையாளர் ஊடாக யாழ். மாவட்ட வங்கியாளர் சங்கப் பொருளாளருடன் தொடர்பு கொண்டு தங்களைப் பதிவுசெய்து கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

இயக்குநர்,
யாழ்ப்பாணக் கல்லூரி,
பட்டதாரிப் பிரிவு.

அல்லது

திரு. அ. கோபாலகிருஷ்ணன்
மக்கள் வங்கி,
யாழ்./ கன்னாதிட்டி.

[சி/320]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகம்மா கிருஸ்ணபிள்ளை

பொலிகண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அரியாலையை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி நாகம்மா கிருஸ்ணபிள்ளை காலமாகி விட்டார்.

இவர் இந்திராணி வரதராஜாவின் (எழுதுவினைஞர் யாழ் மாநகர சபை) அன்புத் தாயாரும், தி. சிவானந்தனின் (நூலகம், யாழ். பல்கலைக்கழகம்) பெரிய தாயாரும், ஐயாத்துரை, வரதராஜா (எழுதுவினைஞர் யாழ். செயலகம்), கலாமாலினி (ஆசிரியை, நாரந்தனை கணேசா வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26-1-95) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு இல. 49, கலைமகள் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
ஐ. வரதராஜா (மருமகன்)

49, கலைமகள் வீதி,
அரியாலை. (34866)

## திருமதி இரத்தினம்மாள் இராமச்சந்திரன்

காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம்மாள் - இராமச்சந்திரன் நேற்று 25. 1. 95 இல் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற இராமச்சந்திரனின் அன்பு மனைவியும், றஞ்சனாவின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மாமியாரும் நிஷாந்தியின் அன்புப் பேர்த்தியுமாவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26-1-95) வியாழன் பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
றஞ்சனா
(மகள்)

சேச்லேன்,
உடுவில். (34870)

## பொன்னையா தில்லையம்பலம்

சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னையா தில்லையம்பலம் நேற்று புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் அமிர்தரத்தினத்தின் அன்புக் கணவரும், ஸ்ரீ இராமநாதன் [பிராந்திய முகாமையாளர், உப்புக் கூட்டுத்தாபனம்], மங்கையர்க்கரசி, ஸ்ரீஸ்கந்தராசா [ஓமான்], காசிநாதன் [முன்னாள் கொள்வனவு உத்தியோகத்தர், மானிப்பாய் ப. நோ. கூ. ச.], யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், பெரியம்மா, புவனேஸ்வரி (ஆனைக்கோட்டை) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சண்டிலிப்பாயில் இன்று வியாழக்கிழமை (26-1-95) பி.ப. 2.00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. காசிநாதன் (மகன்)

(34871)